விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 18 வெள்ளிக்கிழமை (03.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 258

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கைக்கான விசேட தூதுவராக நிருபமா ராவ் விரைவில் நியமனம்!

## இந்திய மத்திய அரசு புது வியூகம்



(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்தியா தனது விசேட தூதுவராக தற்போதைய இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவை நியமிக்கவுள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (18ஆம் பக்கம் பார்க்க)

## டெல்லி திரும்பினார் நிருபமா ராவ் பிரதமரிடம் அறிக்கை கையளிப்பார்

(கொழும்பு)

முகாம்களில் தங்கியுள்ள தமிழர்களின் மீள் குடியேற்றப்பணிகள் குறித்தும் இந்தியாவின் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடவும் அறிந்துகொள்ள வழிசெய்ய வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி பிரதமருக்கு கோரிக்கை வைத்தார்.

இதையடுத்து பிரதமர் மன்மோகன் சிங் தமிழர்களின் மீள் குடியேற்றப்பணி, நிவாரணப்பணி குறித்து நேரில் கண்டு அறிக்கை தயாரிக்க இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவை மூன்று நாட்கள் பயணமாக இலங்கை அனுப்பிவைத்தார்.

வவுனியா முகாம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களை நிருபமா பார்வையிட்டார். முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டார்

நேற்று முன்தினம் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜ (18ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் புலிகள் செய்த கொலைகள் தமிழினி வெளிப்படுத்தியுள்ளாராம்

### குற்றப் புலனாய்வு நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் மகளிர் அணித் தலைவி தமிழினி என்ற சுப்ரமணியம் சிவகாமி புலிகள் கடந்த காலங்களில் வடக்கில் மேற்கொண்ட கொலைகள் தொடர்பான பல தகவல்களை வெளியிட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிவான் ரஷ்மி சிங்கப்புலிக்கு அறிவித்துள்ளனர்.

சந்தேக் நபர் தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2009ஆம் ஆண்டு மே மாதம் (18ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று டெல்லி செல்வதற்காக கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்.

டெல்லி செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்திற்கு சென்ற அவர் அங்கு செய்தியாளர்களை சந்தித்து ராஜபக்ஷ அரசுமீது குற்றம் சுமத்தினார். (ந-5)

## சீன உயர்மட்டக் குழுவுடன் ஜனாதிபதி நேற்று சந்திப்பு

(கொழும்பு)

சீனாவிலிருந்து உத்தியோக பூர்வ விஜயமொன்றை இலங்கைக்கு மேற்கொண்டிருக்கும் உயர் மட்டக்குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவை அலரி மாளிகையில் நேற்று சந்தித்து உரையாடினர்.

இவர்கள் யுனான் மாகாணத்தில் இருந்து வருகை தந்துள்ளார்கள். நேற்று இவ் உயர் மட்டக் குழுவுடன் யுனான் மாகாண ஆளுனருடன் சீனத் தூதுவரும் ஜனாதிபதியை சந்தித்தார்.

இலங்கைத் தரப்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உட்பட அமைச்சுக்களின் செயலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ந-5)

## சட்டவிரோத மது உற்பத்தி தடுக்க விசேட பொலிஸ் பிரிவு

### யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவில் சட்ட விரோத மது உற்பத்தி, பாவனையைத் தடுப்பதற்கு பொலிஸ்மா அதிபரின் பணிப்பில் விஷேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்ம தேவா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

யாழ். மாவட்டத்தில் இடம் பெறும் சட்ட விரோத மது உற்பத்தி, பாவனையைத் தடுப்பதற்கு பொலிஸ் மா அதிபரின் பணிப்பில் விஷேட பொலிஸ் (18ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி எம்.பி. அரசுக்கு ஆதரவு

(கொழும்பு)

18ஆவது அரசியல் சீர் திருத்தத்துக்கு ஆதரவளிக்க மற்றுமொரு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முன் வந்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏர்ல் குண சேகர நேற்று இதற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த அரசியலமைப்பு சீர் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தால் அது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் (18ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டால் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்

### நிருபமா ராவிடம் தமிழ் கட்சிகளின் அரங்கம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இராணுவ மயமாக்கலை தடுத்து மக்களின் அர்த்தமுள்ள மீள்குடியேற்றத்தை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என தமிழ் கட்சிகளின் அரங்கம் நேற்று இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவை நேற்று இந்திய உயர் ஸ்தானிராலயத்தில் வைத்து தமிழ் கட்சிகளின் அரங்கத்தின் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

இச் சந்திப்பில் தமிழ் கட்சிகளின் அரங்கம் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், எஸ்.சந்திரகாசன், எம்.சிறிதரன், கே.குமரகுருபரன் உள்ளிட்ட 12 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்

திரு. ப.விக்னேஸ்வரன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் தம் பணியில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும் சக உத்தியோகத்தர்களும்
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.


# புலிகள் இயக்கத்துக்கு நிதியுதவி தமிழர் மீது அமெரிக்காவில் வழக்கு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு மில்லியன் கணக்கான டொலரை உதவியாக வழங்கினார் என்று குற்றஞ்சாட்டி அமெரிக்காவின் பிரபல தொழிலதிபர்களில் ஒருவரும் கோடீஸ்வர வர்த்தகருமான புலம்பெயர் தமிழர் இராஜ் இராஜரட்ணத்துக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவரது தந்தை ஜேசுதாசன் இராஜரட்ணமும் இவ் வழக்கின் எதிரிகளில் ஒருவராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்று தெரிவித்து 24 தமிழர்கள் இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அமைப்புக்களில் ஒன்றான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு இராஜ் இராஜரட்ணம் இப் பெருந்தொகை நிதியை வழங்கியிருக்கின்றார் என்றும் குறிப்பாக சுனாமி நிவாரண நிதியம் என்கிற பெயரில் புலிகளுக்கு இரண்டு மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளார் என்றும் இவரும் இவரது குடும்பத்தினரும் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகப் பிரசாரங்களை முன்னெடுத்து வந்துள்ளார்கள் என்றும் வழக்காளிகள் மன்றுக்குத் தெரிவித்துள்ளனர். இவ் வழக்கைத் தொடர்ந்து விசாரிக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (ந-5)

# 18-வது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தக் கோரிக்கை

## சமூக ஜனநாயகக் கட்சி விடுத்தது

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையூடாக நாடாளுமன்றத்தைப் பொம்மையாக மாற்றி, அரசியல் அமைப்பு ரீதியான சர்வாதிகாரத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளதாகவும் இதன் மூலம் நாட்டிற்கு ஏற்படக் கூடிய அழிவை தடுத்து நிறுத்துவதற்காகப் 18-வது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்குத் தமது எதிர்ப்பை வெளியிடுமாறு சகல முற்போக்குக் கொள்கை கொண்ட மக்களையும் கேட்டுக் கொள்வதாக இலங்கை சமூக ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள 18-வது திருத்தத்தின் ஊடாக இந்த அரசியல் அமைப்பின் கீழ் ஜனாதிபதியாக இருக்கும் ஒருவர் பதவி வகிக்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச சேவைகளை அரசியல் தலையீடுகள் இன்றி முன்னெடுத்துச் செல்வதற்காகக் கொண்டு வரப்பட்ட 17-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை மாற்றியமைத்து அதனை வலுக்குன்றச் செய்யும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

18-வது அரசியல் அமைப்புத் திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் நிறைவேற்றப்பட்டாலும் நாட்டு மக்களின் விருப்பம் அதில் வெளிக்காட்டப்படப் போவதில்லை எனவும் இலங்கை சமூக ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## பொ.சு.ப., பொலிஸார் கூட்டாக

# யாழ்.நகர உணவகங்களில் நேற்று அதிரடிச் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர உணவகங்கள், ஹோட்டல்களில் சுகாதார சீர்கேடுகளைத் தடுக்க 10 சுகாதார பரிசோதகர்கள் மற்றும் 55 பொலிஸார் அடங்கிய விசேட குழு நேற்று திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்ததாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் நெவின் பத்மதேவா மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நகரக் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் சுகாதார சீர்கேடுகளைத் தடுத்து மக்கள் மத்தியில் பரவும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகமும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காகப் 10 சுகாதார பரிசோதகர்களும் 55 பொலிஸாரும் அடங்கிய விசேட குழு நேற்று முதல் தமது பணிகளை ஆரம்பித்துள்ளது.

இவ் விசேட குழு யாழ்.நகரிலும் சுற்றுப் புறத்திலும் உள்ள உணவகங்கள், ஹோட்டல்களுக்கு நேரடியாகச் சென்று பழுதடைந்த உணவுப் பண்டங்கள், சுகாதார முறையற்ற உணவு வழங்கல்கள் என்பன தடுக்கப்படும்.

குறிப்பாக யாழ்.நகர் உணவகங்களில் தயாரிக்கப்படும் உணவுகளுக்குப் பயன்படுத்தப்படும் உருளைக்கிழங்கு பல நாள்கள் பழுதடைந்து அழுகியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் உணவகங்களின் அலுமாரிகளில் இலையான்கள் காணப்படுவதுடன் காலாவதியான உணவு மற்றும் குளிர்பானங்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சுகாதார சீர்கேடுகளினால் மக்களுக்கு வயிற்றோட்டம், செங்கண்மாரி, நெருப்புக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஏற்படுகின்றது.

அதேநேரம் உணவகங்களின் சுற்றுபுறத்தில் தண்ணீர் தேங்கும் இடங்கள் இருப்பதால் டெங்கு பரவும் ஆபத்தும் உள்ளதாகத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திடீர் பரிசோதனை மூலம் சுகாதார சீர்கேடுகள் காணப்படும் உணவகங்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் மூலமே யாழ்.மாவட்டத்தில் தொற்று நோய்ப் பரம்பலைத் தடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். (ந-5)


American

Just drink it !



இலங்கையில் முதல் தரமான



American Premium Water System

நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதிகள்/ விற்பனை மேற்பார்வையாளர்கள் தேவை.

FMCG விற்பனை அனுபவத்துடன் வட பகுதியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கஜமுகன் (ESP)
57/47, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
3 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

(C-994)


# திருட்டு நோக்கம் கொண்ட இருவர் நல்லூரில் கைது

நல்லூர் மஹோற்சவத்திற்கு வருகை தரும் அடியார்களின் நகைகளை அபகரிக்கும் நோக்கில் ஆலய வீதியில் நடமாடிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களைக் கைது செய்துள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்த மஹோற்சவத்திற்கு வருகை தரும் அடியார்களின் நகைகளை அபகரிக்கும் நோக்கில் நடமாடிய இரு இளைஞர்கள், சிவிலில் கடமையாற்றிய இரகசியப் பொலிஸாரால் கடந்த 31ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் காத்தான்குடியையும் மற்றையவர் வாழைச்சேனையையும் சேர்ந்தவர்கள்.

இருவரும் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இம்முறை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நகைகள் திருடப்பட்ட சம்பவம் இதுவரை இடம் பெறவில்லை.

அதற்குரிய தடுப்பு நடவடிக்கை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். பொலிஸாரின் விழிப்புணர்வு நடவடிக்கைகளைப் பொது மக்களும் உரிய முறையில் பின்பற்றுவதால் திருடர்களின் கைவரிசையைத் தடுக்க முடியும் என யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவா மேலும் தெரிவித்தார். (ந-5)






சிவகாளி ஜோதிடம்

அன்பான யாழ்.குடி மக்களே!
உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் பல சோதிடர்களை அணுகி இருந்த போதும் சரியான பலனை அறிய முடியாது உள்ளீர்களா?
இதோ இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல
கைரேகை ஜோதிட வல்லுனர்

மஞ்சநாத சுவாமி

உங்கள் ஜாதக பலன்கள், கைரேகை, நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வெளிநாட்டுப் பயணம், எதிரிகள் கண்திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள் ஆகியவற்றிற்குச் சரியான முறையில் தீர்வு பெற்றுத் தருவார்.

உடனே நாடுங்கள்:
சிவகாளி ஜோதிடம், மஞ்சநாத சுவாமி, கடைச்சாமி கோயில் ஒழுங்கை, இல.211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (வைஷ்ணவி ரெயிலர்ஸ் அருகாமை)
தொ.பே. இல. 077 2624729 / 077 2699373

கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்: காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை

# இன்று ஒரு தகவல்

## பணியில் நேர்மை

ஒருத்தர் ஓடிவந்தார். இன்னொருவரைப் பார்த்து,

''சேர், உங்களுடைய சைக்கிளை ஒருநாள் இரவல் கொடுங்களேன். பக்கத்து ஊருக்கு போய்விட்டு வரவேண்டியிருக்கிறது'' என்றார்.

இவர் சைக்கிளைக் கொடுத்து, ''பத்திரமாக கொண்டு போங்க''என்றார்.

சேர், ''இதைப் பத்திரமாக கொண்டு போகிறேன். கவலையே வேண்டாம். ஏனெனில் இது உங்களுடைய சைக்கிளாக நான் நினைக்கவில்லை. என்னுடைய சைக்கிளாக நினைக்கிறேன்''என்றார்.

அதன் பின்னர் தான் இவருக்கு உண்மையாகவே பயம் வந்தது. ஏனெனில் அவர் சொன்னது போலவே அதை தன்னுடைய சைக்கிளாக நினைத்து தள்ளிக் கொண்டு போய் விட்டால் என்ன செய்வது?

எது எதை நம்முடையதாக நினைக்க வேண்டும் என்பதற்கு ஒருவரையறை இருக்கிறது. சிலபேர் அலுவலகத்தையே வீடாக நினைத்து விடுவது உண்டு.

அப்படிப்பட்டவர்கள் கூட வீட்டை அலுவலகமாக நினைப்பதில்லை. ஏனெனில் வீட்டில் இவர் அலுவலராக நடந்து கொள்ள முடிவதில்லை. இவையெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்பொழுது விடயத்துக்கு வருவோம்.

பொறியியல் மேதை டாக்டர் விசுவேசுவரய்யா பாரதரத்னா விருதெல்லாம் பெற்றவர். அலுவலக வேலை வேறு – சொந்த வேலை வேறு என்பதற்கு ஒரு உதாரணமாக இருந்தவர்.

அவர் மைசூர் மகாராஜாவிடம் திவானாக இருந்தார். ஒரு நாள் அரசாங்க வேலை காரணமாக வெளியூர் போயிருந்தார். ஹாசன் என்ற ஊருக்குப் பக்கத்தில் ஒரு பயண மாளிகை இருந்தது. அங்கே தங்கிவிட்டார். இரவு அங்கே தங்கியிருந்து விட்டு விடிந்ததும் ஊருக்குத் திரும்புவதாக திட்டம்.

இரவு தூங்குவதற்கு நீண்ட நேரமாகி விட்டது. அவ்வளவு நேரமும் அரச வேலைகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அரசாங்க பைல்கள் நிறைய இருந்தது. அதையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்தார்.

படித்துப் பார்த்து பரிசீலனை செய்தார். அவற்றில் எழுத வேண்டியதையெல்லாம் எழுதிக் கையெழுத்திட்டார். ஒரு வழியாக அந்த வேலையெல்லாம் முடிந்தது.

அதற்குப்பின் என்ன செய்தார் என்றால்... தன்னுடைய சூட்கேஸைத் திறந்து அதிலிருந்து இரண்டு மெழுகுவர்த்தியை எடுத்துக் கொளுத்தி வைத்தார்.

அந்தப் பயணமாளிகையில் அதுவரைக்கும் எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்குகளை அணைத்து விட்டார்.

அதற்குப் பின் அந்த மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் சில புத்தகங்களை தொடர்ந்து படிக்க ஆரம்பித்தார். அந்தப் பயண மாளிகையில் பணியாளராக இருந்தவர், இதைப் பார்த்து விட்டு ஓடி வந்தார். மறுபடியும் மின்விளக்கை போடுவதற்காகப் போனார். விசுவேசுவரய்யா அதைப்பார்த்து விட்டுப் போட வேண்டாம் என்று சொல்லிவிட்டாராம்.

''இதுவரைக்கும் நான் அரசாங்க அலுவல்களை கவனித்துக் கொண்டிருந்தேன். அதனால் மின் விளக்குகள் அப்பொழுது எரிந்ததில் தப்பில்லை. இப்பொழுது நான் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன். இது எனது சொந்த வேலை.

இங்கேயிருக்கும் மின் விளக்கு அதற்காக ஏன் எரிய வேண் டும்? என்று கேட்டாராம். இப்பொழுது இருக்கும் அரசுப் பணியா ளர்களிடம் இந்தச் சம்பவத்தை பேச்சோடு பேச்சாக சொல்லிப் பார்த்தேன். அவர்களால் இதை ஜீரணிக்க முடியவில்லை.

''நேர்மை தேவை தான். அதற்காக அவ்வளவு தூரத்துக்கு அது தேவையா?''என்று தோன்றுகிறது அவர்களுக்கு.

விசுவேசுவரய்யா அப்படிச் செய்தது 'தான் ஒரு நேர்மையாளர்'என்று இந்த உலகத்தில் நிரூபிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. தான் அப்படி நடந்து காட்டினால் தன்னைச் சுற்றியிருப்பவர்களும் அதைக் கேள்விப்படுபவர்களும் முடிந்தளவுக்குப் பொதுவாழ்வில்,அரசுப் பணியில் நேர்மையைக் கடைப்பிடிக்க முயற்சி செய்யலாமே என்பதற்காகத் தான்.

இப்பொழுதும் சிலபேர் இருக்கிறார்கள். இவர்கள் அலுவலகம் வேறு– வீடு வேறு என்று நினைப்பதில்லை. ஒருத்தர் அப்படித்தான்.

அவருக்கு அவசரமாக 5000 ரூபா தேவைப்பட்டது. அலுவலகப் பணத்தை எடுத்துக் கொண்டார். அந்த நேரம் பார்த்து'ஓடிற்' வந்து விட்டது. அகப்பட்டுக் கொண்டார். விசாரணை நடந்தது.

அவர் சொன்னார்: 'சேர் நான் நேரம் காலம் பார்க்காமல் அலுவலகத்தில் வேலை செய்வேன். ஏனெனில் அதை என்னுடைய வீடாக நினைக்கிறேன். அவசரத்துக்கு அந்தப்பணத்தை எடுத்தேன். மறுபடியும் வைத்து விடலாம் என்று தான் இருந்தேன். அதற்குள் இப்படி ஆகிவிட்டது. நீங்கள் என்ன நினைத்தாலும் சரி, நாள் அலுவலகம் வேறு– வீடு வேறு என்று நினைக்கவில்லை. அது என்னுடைய சுபாவம்''என்றார்.

விசாரணை செய்தவர் தீர்ப்பு வழங்கினார்:

''உங்கள் சுபாவத்துக்கு மதிப்புக் கொடுத்து நானும் தீர்ப்பு வழங்குகிறேன். நீங்கள் கொஞ்ச நாள் சிறையில் இருந்து விட்டு வாருங்கள். அது உங்களுக்குக் கஷ்டமாக இருக்காது என்று நினைக்கிறேன். ஏனெனில் அங்கே போனாலும் நீங்கள்– உங்கள் சுபாவப்படி – வீடு வேறு சிறைவேறு என்று நினைக்கமாட்டீர்கள் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் சமூகக்கல்வி, கணிதம், சுகாதாரமும் உடற்கல்வியும், ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், வழிகாட்டலும் ஆலோசனையும், இரண்டாம் மொழி(சிங்களம்) ஆகிய பாடங்களுக்கு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, அல்லது 2-I இனைச் சேர்ந்த பின்வரும் தகைமைகளைக் கொண்ட யாழ். வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிட்ட பாடத்தினை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடங்களில் விண்ணப்பதாரி 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்கும் பாடத்துறையில் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவுத் திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடங்களுக்குக் குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறித்த திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் மேலதிக விபரங்களை யாழ். வலயக் கல்வி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் ஏற்கனவே இவ் வருடத்தில் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை எனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# இராசி பலன்

03.09.2010

(ஆவணி 18, வெள்ளிக்கிழமை)

தசமி பின்னிரவு 3.37 மணி வரை

மிருகசீரிடம் முற்பகல் 9.53 மணி வரை

இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

சுபநேரம் 6.05-7.35 மணிவரை

**மேடம்** விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழும் நாள், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும், சேமிப்பு உயரும்.

**இடபம்** வாய்ப்புக்கள் வாயிற் கதவைத் தட்டும் நாள், அலங்காரப் பொருட்களை வாங்க முன்வருவீர்கள், உறவினர் மத்தியில் மதிப்பும், மரியாதையும் உயரும், உத்தியோக உயர்வு உண்டு.

**மிதுனம்** பெண்தெய்வ வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மனஆறுதல் தரும் பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும், தூரத்து உறவினர்களின் வருகையால் செலவுகள் அதிகரிக்கும், தொழில் நலன்கருதி வெளியூர் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.

**சிங்கம்** இனிமையான நாள், பொருள் வரவிற்கு அத்திவாரமிடுவீர்கள், பயணங்கள் எண்ணியபடியே கைகூடும், உறவினர் வருகையுண்டு, இறை நம்பிக்கை மேலோங்கும்.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், அந்நியர்களின் சந்திப்பால் அனுகூலமுண்டு, உற்சாகமாக செயற்படும் நாள், பிறர் உதவியுண்டு, தெய்வ தரிசனம் உண்டு.

**துலாம்** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்க வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவர்கள் விலகுவர், பிரயாணத்தின் மூலம் அனுகூலம் ஏற்படும்.

**விருச்சிகம்** இறை வழிபாட்டில் இனிமை காண வேண்டிய நாள், குடும்ப உறவினர்களை அனுசரித்துப் போவது நல்லது, மரியாதைக் குறைவான சில சம்பவங்கள் ஏற்படலாம்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர் சிலரைத் தேடிச் சென்று சந்திப்பீர்கள், தொழில், வியா பாரத்தில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மாற்றினத்தவர்கள் மகிழ்ச்சிக்குரிய செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பர், உடல் நலம் சீராகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும்.

**கும்பம்** இனிமையான நாள், மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய செய்தியொன்றும் சம்பவம் ஒன்றும் நிகழும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள் ,சொத்துப் பிணக்குகள் விலகும்.

**மீனம்** தொழில் ரீதியாக வரவேண்டிய பண வரவு கைக்குக் கிடைக்கலாம், தாயின் உடல் நலம் சீராகும், தொலைதூரத் தகவல்தொழில் வளர்ச்சிக்கு உதவும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

வளவன்

# கல்விமாணிப் பட்டநெறி பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்விநிறுவகத்தில் கல்விமாணிப்பட்டநெறி 2008/2009 கல்வி ஆண்டுக்கான முதலாம் ஆண்டுப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய கல்வி நிறுவக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப் பிராந்திய நிலையத்திலிருந்து மேற்படி பரீட்சைக்கு தோற்றிய 59 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

மேற்படி பரீட்சைப் பெறுபேறுகள் மாணவர்களின் சொந்த முகவரிகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தால் விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிவிருத்திக் கற்கை நெறிகளுக்கு விரிவுரையாளர்களாகக் கடமையாற்றுவதற்குத் தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்களைத் தேசிய கல்வி நிறுவகம் கோரியுள்ளது.

மேற்படி கற்கைநெறி யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்காக சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் நடாத்தப்படவுள்ளது.


விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தைப் பணிப்பாளர், ஆசிரியர் வலுவூட்டல் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், மகரகம என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு தேசிய கல்வி நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 |
| தக்காளி | 60 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 60 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 90 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 30 | 50 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 90 |
| போஞ்சி | 120 | 40 | 130 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 | 85 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 |







யாழ்.கடற்றொழில் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியின் மீன்பிடி பயிற்சி நெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், ஜெய்க்கா நிறுவனத்தின் பிரதிநிதி டோக்கியோ கொன்யோ ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் வருடாந்த மஹோற்சவம்

(மருதங்கேணி)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாட்கள் திருவிழா நடைபெறும்.

இதில் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை வெண்ணெய் திருவிழாவும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மஹா ஹம்சன் போரும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை சமுர்த்திரத் தீர்த்தமும் இடம்பெறும். (ஸ்ரீ-2-35)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்ஸ்ரீபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் 'மகாபாரதம்' என்னும் விடயம் பற்றி பண்டிதர் பொன். சுகந்தன் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-4-35)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய உற்சவ காலத்தையொட்டி நடைபெற்றுவரும் தெய்வீக பேருரையில் இன்று வெள்ளிக்கிழமை 'ஆறில் மூன்று' என்னும் விடயம் பற்றி வவுனியா மாவட்ட தமிழ்ச்சங்க தலைவரும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஆசிரியருமான தமிழருவி த.சிவகுமாரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-4)




## மூன்றாம் தவணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகு மென கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மத்தியஸ்த விசாரணைகள்

(அல்வாய்)

பருத்தித்துறை மத்தியஸ்த சபையின் விசாரணைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மீளவும் யாழ். வேலாயுதம் மகா வித்தியாலத்தில் நடைபெறுமென தவிசாளர் ஆ.வடிவேலு அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-19)

# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 20 ஆம் நாளான இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை செல்வி பரமேஸ்வரி கணேசன் (பாட்டு), கே.குகபரன் (வயலின்), வி.ரமணா (மிருதுங்கம்) செல்வன் என்.மாதவன் (கடம்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

அத்துடன் திருமதி பூஷணி கல்யாணராமன் (பாட்டு), கும்பகோணம் கே.சுவாமிநாதன் (மிருதங்கம்), என்.மாதவன் (கடம்), எஸ்.செந்தூரன் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

✠✠✠

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்றுவரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை "துள்ளி வருகுது வேல்'' என்னும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து சாவல்கட்டு அந்திக்குளி ஞானவைரவர், தொல்புரம் ஆதி முத்துமாரி அம்பாள், சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

✠✠✠

நல்லூர்க் கந்தன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நடைபெற்று வரும் "வில்லிபாரதம்" என்னும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு ''சூதும் வாதும்" என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-4)

# விலை நிர்ணய நடைமுறைகள் குறித்து அறிவுறுத்தியும் பின்பற்றாத வர்த்தகர்கள்

(யாழ்ப்பாணம்)

பொருட்களின் விலை நிர்ணய நடைமுறைகள் பற்றி பல தடவை வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டும் அந் நடைமுறைகளை வர்த்தகர்கள் மீறிவருவதாக யாழ். செயலக பாவனையாளர் அலுவலக அதிகார சபையின் மாவட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவ் வர்த்தகர்கள் தொடர்பாக யாழ். மாவட்டத்தில் 102 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் 81 வழக்குகள் யாழ்.நீதிமன்றத்தாலும் மீதி வழக்குகள் மல்லாகம் நீதிமன்றத்தாலும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதில் 81 வழக்கில் 71 வழக்குகளின் தீர்ப்பின் மூலம் 3இலட்சத்து 28 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக பெறப்பட்டதாகவும் ; அத்துடன் 10 வழக்குடன் தொடர்புடையவர்கள் சமுகமளிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பல்பொருள் வியாபார நிலையங்கள், புடைவை நிறுவனங்கள், கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையங்கள், மின்சார உபகரண விற்பனை நிலையங்கள், உணவகங்கள் போன்றவற்றின் உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று செயலகத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4-6)

## செயற்குழுக் கூட்டம்

(அல்வாய்)

அகில இலங்கை காந்திய சேவா சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சங்கத் தலைவர் ஆ.வடிவேலு தலைமையல் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-2-19)

## "புலரும் பொழுதுகள்" இசை இறுவெட்டு வெளியீட்டுவிழா

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆம் ஆண்டுப்பூர்த்தியை முன்னிட்டு 10 ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களினால் வெளியிடப்படும் புலரும் பொழுதுகள் (DAWN) இசை இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் விசேட கல்வித்துறை முகிழ்நிலை ஆசிரியர் செல்வன் பா.றஜிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் இறுவெட்டு வெளியீட்டுரையை கல்லூரியின் விரிவுரை இணைப்பாளர் பா.தனபாலன் வழங்கவுள்ளதுடன் முதற் பிரதியை சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் பெற்றுக்கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-4)

## கல்விமாணி விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்ட நெறிக்குரிய முதலாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என தேசிய கல்வி நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கருத்துரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான சமகால விவாதம் என்னும் விடயம் பற்றிய கருத்துரையும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கருத்துரையை கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் றொகான் எதிரிசிங்க வழங்கவுள்ளார். இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கல்நதுகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

## உதைபந்தாட்ட லீக் போட்டிகள்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் அணிக்கு 7பேர் கொண்ட உதைபந்தாட்ட லீக் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது.

இதில் மற்றுமொரு போட்டியில் பிற்பகல் 4.30 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உரும்பிராய் சென்மைக்கல்ஸ் அணி மோதவுள்ளது. (ஸ்ரீ-4-24)

## முதியோர் அனுமதி இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர் தங்கிவாழும் விடுதிகள் மிக விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இதற்கமைய 5,6 ஆகிய இலக்கமுடைய பெண்கள் விடுதிகளும் 2,3 ஆகிய இலக்கமுடைய ஆண்கள் விடுதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

எனவே இடப் பற்றாக்குறையிலான கருத்திற்கொண்டு மறு அறிவித்தல் வரும் வரை முதியோர் அனுமதி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவனருக்கு எதிராக வழக்கு



விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவனர் ஜுலியன் அலன்ஜேக்கு எதிரான கற்பழிப்பு வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் போவதாக சுவீடன் அதி காரிகள் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே கிடப்பில் போடப்பட்டிருந்த இந்த வழக்கு தொடர்பாக தற்போது புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதால் மீண்டும் விசாரணையைத் தொடரப்போவதாக சுவீடனின் சட்டத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க பாதுகாப்புப் பிரிவினர் மத்தியில் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்ட சுமார் 98 ஆயிரம் இரகசிய ஆவணங்களை அண்மையில் விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இவற்றுள் சில ஈராக்கில் அமெரிக்க இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களும் அதனால் ஏற்பட்ட பொதுமக்களின் உயிரிழப்புக்களும் சம்பந்தமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# நீதிமன்றின் கண்காணிப்புக்குட்பட்ட 3 கிலோ ஹெரோயின் மாயமானது

பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் பரிசோதனைகளுக்காக அரசாங்கப் பகுப்பாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டு வந்த மேல் நீதிமன்றத்திற்குரிய சுமார் பத்து வழக்குகளுக்குரிய 3 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் காணாமல் போயிருப்பதாக தெரியவருகிறது.

கடந்த 31 ஆம் திகதி கொழும்பு புதுக்கடை இலக்கம் 5 மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட கிருலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் ஒரு கிலோகிராம் போதைப் பொருள் இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திலிருந்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது அந்தப் பொதியில் மஞ்சள் தூள் காணப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மஹரகமவைச் சேர்ந்த போதைப்பொருள் விற்பனையாளரான களு துஷார என்பவருக்கு வழங்குவதற்காக இந்தப் போதைப் பொருளை எடுத்துச் சென்ற போது சம்பந்தப்பட்ட பெண் பொலிஸாரின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கடந்த 2006 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இவரிடம் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் சம்பந்தமாக வழக்கு விசாரணைகளுக்காக இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத் தின் சார்பில் ஆஜரான அதிகாரிகளை நீதிபதி கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இப்படியான 10 சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் இந்தச் சம்பவங்கள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து திணைக்களத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

(ஶ்ரீ-2)

# அம்பாந்தோட்டை துறைமுக திறப்புவிழாவிற்கு சீன ஜனாதிபதியை அழைக்கத் திட்டம்

அம்பாந்தோட்டை துறைமுகம் எதிர் வரும் நவம்பர் மாதம் 19ஆம் திகதி திறக் கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள் ளன.

சீனாவின் முழுமையான உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட துறைமுகக் கட்டுமானப் பணிகள் நிறைவடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அந்த துறைமுகத் திறப்பு விழாவுக்கு சீன ஜனாதிபதியை அழைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விருப்பம் தெரிவித்ததாகவும் இது குறித்து பிரதமர் டி.எம். ஜயரட்ன தனது சீன விஜயத்தின் போது சீன உயர் மட்டத்தினருடன் கலந்துரை யாடியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஶ்ரீ-2)

# புதிய கற்கைகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் NVQ தர தேசிய அரச அங்கீகார சான்றிதழ்களை வழங்கிய தொழிற் பயிற்சி அதிகார சபையானது உயர்தர மாணவர்களின் நன்மை கருதி யாழ்.மாவட்ட தொழிற் பயிற்சி வளாகத்தில் கடந்த யூலை மாதம் அன்று புதிய கற்கை நெறிகளை ஆரம்பித்தது.

6 மாத கற்கை நெறிகளான பற்ற வைத்தல் (வெல்டிங்) மரப்பொறியியல், கணனி வன்பொருள், அழகுக்கலை ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன. இதில் இணைய விரும்புவோர் தமது பெயர் ,முகவரி, கல்வித் தகைமை உள்ளடங்கிய சுயவிபரக் கோவையை தாமே தயாரித்து, இணைப்பாளர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 375, கே. கே. எஸ். யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி அன்று காலை 9 மணி அளவில் நேரில் சமுகம் தருமாறு இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார்.

(ஶ்ரீ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

### முதலாம், இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (புதிய, பழைய பாடத்திட்டம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் எல்லா ஆண்டுகளுக்குமான பரீட்சைகள் பின்வரும் நேர அட்டவணையின் படி ஆரம்பமாகும். நேர அட்டவணை தொடர்பான விபரங்களை பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| | ஆரம்ப திகதி |
|---|---|
| 1ம் வருடம் 2ம் அரையாண்டு | 15.09.2010 |
| 2ம் வருடம் 1ம் அரையாண்டு | 09.09.2010 |
| 3ம் வருடம் 1ம் அரையாண்டு | 17.09.2010 |
| 4ம் வருடம் 1ம் அரையாண்டு | 27.09.2010 |

பதிவாளர்
02.09.2010

(சி/996)

ஆனைக்கோட்டை
மூத்த நயினார் கோயில்

## இரட்ணசபாபதி திருமண மண்டபம் மங்களகரமான திறப்பு விழா



காலம் :- 03.09.2010
சுபநேரம் :- 9.40 மணி முதல் 11.40 மணிவரை

அனைவரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்கனம்
தர்மகத்தாக்கள்

திறப்பு விழா சிறப்புற வாழ்த்துவோர்! :-

(2402)

V.S.S சாப்பாட்டு நல்லெண்ணை
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

சாம்சன் கட்டிடப் பொருள் விற்பனை நிலையம்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

கமலா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

சரவணன் கட்டிட உபகரணங்கள் விற்பனையாளர்
T.P-0773960345 மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டைச் சந்தி, ஆனைக்கோட்டை.

பரிமளா ஸ்ரோர்ஸ்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை.

தனிஸ் ரெக்ஸ்
மூத்தநயினார் கோவிலடி, நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

சந்திரன் பான்சி பலஸ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

துரைஐயா மண்டபம்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

சாருஜன் பான்சி கவுஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# சட்டவிரோத மருந்துப் பொருட்கள் கிரிபத்கொடவில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பெருமளவு மருந்துப் பொருட்கள் கிரிபத்கொடப் பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இந்த மருந்துப் பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பேலியகொடப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விடுதியின் அறையொன்றுக்குள் மருந்துப் பொருட்கள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்ததகவலொன்றின் அடிப்படையில் பொலிஸார் திடீர் சோதனையை நடத்தியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மருந்துப் பொருட்களின் பெறுமதி இதுவரை மதிப்பிடப்படவில்லை.

சுகாதார அமைச்சின் மருந்துப் பொருள் இறக்குமதிப் பிரிவின் உத்தியோகத்தர்களும் இந்த மருந்துத் தொகையைப் பரிசோதித்துள்ளனர்.

இவற்றை இறக்குமதி செய்தவர் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து எந்தவிதமான அனுமதியையும் பெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ம.ம.முன்னணியில் இணைகிறார்; இராதாகிருஷ்ணன் எம்.பி!

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர்களுள் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன் மலையக மக்கள் முன்னணியில் இணைவது உறுதியாகியுள்ளது.

முன்னணியில் இணைந்து தலைமைத்துவத்தை ஏற்படுதற்கு அவர் ஏற்கனவே மேற்கொண்ட முயற்சி தடைப்பட்ட போதிலும் தற்போது மேற்கொண்ட பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாகவும் வெகுவிரைவில் மலையக மக்கள் முன்னணியின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளதாக மலையகத்தின் நம்பகரமான அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றன.

இராதாகிருஷ்ணன் எம்.பி.முன்னணியின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் பட்சத்தில் தற்போதைய தலைவரான திருமதி சாந்தினி சந்திரசேகரன் கட்சியின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்கலாம் எனக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-2)

# பதில் பிரதம நீதிபதியாக சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நீதிபதி கலாநிதி சிறியானி பண்டாரநாயக்க நேற்று பதில் பிரதம நீதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று காலை இது தொடர்பான வைபவம் நடைபெற்றது ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டார். (ஸ்ரீ-2)

# அரச அதிபர்களின் மாநாடு 6,7ஆம் திகதிகளில் யாழில்

(கொழும்பு)

மாதம் ஒருமுறை கொழும்பில் நடைபெறும் அரசாங்க அதிபர்களின் மாநாட்டின் அடுத்த அமர்வு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதில் நாட்டின் அனைத்து அரசாங்க அதிபர்களும் கலந்துகொள்ளவார்கள் என்று பொது நிர்வாக பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பொதுநிர்வாக அமைச்சின் வேலைத்திட்டங்கள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்க அதிபர்களுக்கான மாநாட்டு அமர்வு ஒவ்வொரு மாதமும் கொழும்பில் நடைபெறுவது வழக்கமாகும். நாட்டின் அனைத்து அரசாங்க அதிபர்களும் இந்த அமர்வில் கலந்துகொள்வார்கள்.

முக்கியமாக மாவட்ட நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்,. சிக்கல்கள் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் குறித்து இந்த அமர்வுகளில் விரிவாக கலந்துரையாடப்படும்.

இந்நிலையில் இம்மாதத்துக்கான அரசாங்க அதிபர்களின் அமர்வை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபர்களுக்கான அமர்வு நடைபெறும்.

இதில் சகல அரசாங்க அதிபர்களும் அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்து கொள்வார்கள். பொது நிர்வாக பிரதியமைச்சர் என்ற வகையில் நானும் கலந்துகொள்வேன்.

தொடர்ந்து அரசாங்க அதிபர்களின் அமர்வுகளை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்றார். (ஸ்ரீ-2)

# பிரபஞ்சம் கடவுளால் உருவாக்கப்படவில்லை; விஞ்ஞானி ஸ்டீபன் ஹவ்கின்ஸ் தகவல்

பிரபஞ்சத்தை உருவாக்கியவர் கடவுள் அல்ல என்ற தகவலை பிரித்தானியாவின் புகழ் பெற்ற விஞ்ஞானி ஸ்டீபன் ஹவ்கின்ஸ் தனது அடுத்த புத்தகத்தில் தெரிவிக்கவுள்ளார்.




1988இல் வெளியான ஹவ்கின்ஸ் புத்தகமொன்றில் பிரபஞ்சம் கடவுளால் உண்டாக்கப்பட்டதை அவர் தெரிவித்தார்.

ஆனால் தற்போது நியூயோர்க்கில் கடவுள் என்ற ஒரு சக்தி இருப்பதை மறுத்து வாதாடியுள்ளார். அமெரிக்க ஆராய்ச்சியாளர் லியோ நார்ட் மலோடினோவுடன் இணைந்து எழுதியுள்ள புத்தகத்தில் புதிய ஆராய்ச்சி விதிகளின் படி பிரபஞ்சத்தின் உருவாக்கத்திற்கு கடவுள் என்ற ஒரு தெய்வீக சக்தி தேவையே இல்லை என்பது தெரிய வந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

ஈர்ப்பு விசையின் மூலம் பிரபஞ்சம் தானாகவே உருவாக்கியிருக்க வேண்டும் என்பதே சரியானதாக இருக்க முடியும் என்றும் அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் பல அறிவியல் உண்மைகளும் இந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தப் புத்தகம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. (-ஸ்ரீ2)

# இலங்கைக்கான புதிய பிரித்தானிய உயர்ஸ்தானிகராக ஜோன் ரெக்கின்

(கொழும்பு)



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராக ஜோன் ரெக்கின் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பிரித்தானிய உயர்ஸ்தானிகராக உள்ள பீட்டர் ஹெய்ஸுக்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதியஉயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஜோன் ரெக்கின் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் பதவி ஏற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்

## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வன்னி மாவட்டத்தின் ஓமந்தை, சேம மடு ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நடமாடும் சேவையைப் பார்வையிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் இவ்வாறே முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ் சாட்டியுள்ளார்.


வாக்களித்த மக்களின் அபிவிருத்தி தொடர்பாக தமது கருத்துக்களை எடுத்துரைப்பதற்குக் கூட சந்தர்ப்பம் மறுக்கபடுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மறுக்கப்படுவதையே மேற்படி சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓமந்தை, சேமமடு மக்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெயர்ந்து இப்பொழுது தான் தமது கிராமங்களில் குடி யேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களது விடயத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நடமாடும் சேவையின் பொழுது நான் இவைகளை நேரில் சென்று உரிய அதிகாரிகளிடம் விளக்கி அம்மக்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ளலாம் என்றிருந்த வேளையில் எம்மை அழைக்காதது எமக்கு வருத்தமளிப்பதுடன் எமது உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன் என்று தனது ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் சிவசக்தி ஆனந்தன் வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## நாகநாதர் நவரட்ணம்



தனங்கிளப்பு,சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் 2 ஆவது ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் நவரட்ணம் கடந்த (31.08.2010) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர்-தங்கம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கனகரட்ணம் ஆகியோரின் சகோதரரும் இராசம்மாவின் அன்புக் கணவரும் நாகேஸ்வரன் (ஜேர்மனி), நாகேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற லோகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி (சங்கத்தானை), லோகேஸ்வரன் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவதாசன் (பிரான்ஸ்), அகிலஜெகதீஸ்வரன் (சங்கத்தானை), ஸ்ரீதரன் (லண்டன்), கருணாகரன் (பிரான்ஸ்), கிரிஜாசக்தி (ஜேர்மனி),பர்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் பிரபா (ஜேர்மனி), ஜனனி (ஜேர்மனி),கீர்த்தனா (பிரான்ஸ்),கார்த்திகா,தார்மிகா,அபிசாந்,சாரங்கன், கார்த்திகன் (சங்கத்தானை), அவ்றோஸ் (பிரான்ஸ்), அம்ஜத் (பிரான்ஸ்), இம்ரான் (பிரான்ஸ்), அர்ச்சனா (லண்டன்), அபிசேக் (லண்டன்), கஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2010) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2 ஆவது ஒழுங்கை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
தொ.பே.0776916103

தகவல்:
மருமகன்
அகிலஜெகதீஸ்வரன்(ஜெயா),
மனைவி,மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(ஓ/993)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# சூரியக் கலங்களில் ஒளியுணர் சாயங்களின் பயன்பாடு

(சென்றவாரத்தொடர்ச்சி)

$S^+ + e \rightarrow S$

இத்தாக்கங்களினால் கலங்களின் வினைத்திறன் குறைவடைகின்றது. திரவ மின்பகுபொருள் பயன்படுத்தப்படும் சூரியக் கலங்களில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அதாவது அறைவெப்ப நிலையிலும் குறைந்த வெப்பநிலையில் மின்பகு பொருள் உறைந்துவிடும்.

2.திண்மத்திற்கும் - திரவத்திற்கும் இடைப்பட்டநிலையில் மின்பகுபொருள் கொண்ட சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக்கலங்கள்.

இக்கலங்களில் திண்மத்திற்கும் திரவத்திற்கும் இடைப்பட்ட நிலையில் மின்பகு பொருள் காணப்படும். இக்கலங்களின் வினைத்திறன் திண்ம மின்பகுபொருள் கொண்ட சாயத்துக்கு உணர்ச்சியுள்ள சூரியக்கலங்களின் வினைத்திறனை விட குறைவானதாகும்.

3. திண்ம மின்பகு பொருள்கொண்ட சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக்கலங்கள்.

இங்கு திரவ மின்பகுபொருளுக்குப் பதிலாக துளை கொண்ட கடத்தி காணப்படும்.

இக்கலங்களின் தொழிற்பாட்டில் சாயத்தின் பங்களிப்பைக் கருதும்போது ,


$S + UV \rightarrow S^*$

$S^* \rightarrow S^+ + e$

$MeoTAD + S^+ \rightarrow S + MeoTAD^*$

திண்ம மின்பகுபொருள் பயன்படுத்தப்படும்

**Spiro -MeOTAD இன் இரசாயனக் கட்டமைப்பு**




படம் 3

சூரியக் கலங்களில் வெவ்வேறு வகையான இயற்கை நிறப்பொருட்கள் உணர்ச்சி உறுத்தி (Sensitizer) ஆக பயன்படுத்தப் படுகின்றன. தனின் (Tanin) கலிக்கமிலம், (Gallicacid) செஞ்சந்தணமரம் (Ced sandal wood) சயனின் போன்றன பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றுள் சயனின் (Cyonin) மிகக் கூடிய வினைத்திறன் உள்ளதாக காணப்படுகின்றது.

சாயத்துக்கு உணர்ச்சியுள்ள சூரியக் கலங்களில் இரண்டு வகையான சாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன.


1.தொகுக்கப்பட்ட சாயங்கள் (Synthetic Dyes)
2. இயற்கையான சாயங்கள் (Natural Dyes)

உருத்தேனியத்தைக்(Ru) கொண்ட சேதனவுறுப்புச் சிக்கற் சேர்வைகளே பொதுவாக தொகுக்கப்பட்ட சாயங்களாக சாயத்துக்கு உணர்ச்சியுள்ள சூரியக்கலங் களில் பயன்படுத்தப்படுகின்றன. இதனை முதன் முதலில் பதிவு செய்தவர் Gratzel என்பவராவார். (1991)

சில Ru சாயங்களில் காபொட்சாலிக் கமிலம் (Carboxylic acid) இரு ஐதரொட்சிக்கூட்டம் (dihydroxy) பொஸ்போனிக்கமிலம் போன்றன பிரிடின் வளையத்திற்கு மேல் இணைந்து காணப்படுவதனால்அவை கூடிய வினைத்திறன் காட்டுகின்றன.

இயற்கையான சாயங்களாக தாவரங்களில் இருந்து பெறப்படும் நிறப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**உருத்தேனியத்தைக்கொண்ட தொகுக் கப்பட்ட சாயம்**




படம் 4

குளோரபில் (Chlorophyll), கரோரீனொய்ட் (Carotenoid), அந்தோசயனின் (Anthoiyanin) போன்றன பயன்படுத்தப்படலாம்.

இவற்றில் குளோரபில் , கரோரீனொயிட் போன்றவற்றின் வினைத்திறன் அந்தோசயனினுடன் ஒப்பிடும்போது குறைவாகவே காணப்படுகின்றது. காரணம் இவற்றில் உள்ள மிக நீண்ட காபன் சங்கிலிகளினால் உருவாகும் திண்மத்தடை (Sterichindrance) $TiO_2$ உடன் இணையும். அவற்றின் திறனை குறைவடையச் செய்கின்றது.

இயற்கையான சாயங்களுடன் ஒப்பிடும் போது தொகுக்கப்பட்ட சாயங்கள் விலையுயர்ந்ததாகவும், நீண்டதொகுப்பு செயன்முறைகளை உள்ளடக்கியதாகவும் நவீன தொழில்நுட்ப முறைகளை கொண்டவையாகவும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் பீற்ரூட், முந்திரிகைப் பழத்தோல் (Grapes Coat), இராசவள்ளிக்கிழங்கு, நாவற்பழம் போன்றவற்றில் இருந்து சாயங்கள் பிரித்தெடுக்கப்பட்டு சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக்கலங்களில் அவற்றின் வினைத்திறன் ஆராயப்பட்டது.

**ஜெயகாந்தன் கேதாரகௌரி**
இரசாயனவியல் துறை,
உதவி விரிவுரையாளர்,
யா/பல்கலைக்கழகம்.

இவற்றில் முந்திரிகைப் பழத்தோல் சாயமே அதிகளவு $TiO_2$ இனால் உறிஞ்சப்பட்டு கூடிய வினைத்திறனைக் காட்டியது.

முந்திரிகைப்பழத் தோலில் உள்ள சாயம் தொகுக்கப்பட்ட உருத்தேனியம் கொண்ட சாயத்துக்கு ஒத்த வினைத்திறன் உடையதாகக் காணப்பட்டது. (முற்றும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 29

**இரண்டு வேறு வேறு நேர் எண்களின் கூட்டுத்தொகை ஆக இரண்டு வேறு வேறு முறைகளில் எழுதக்கூடிய மிகச்சிறிய எண் என்ன?**

**விடைகளை 22-09-2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 27க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**திரு.கே.இராஜகோபால்**
**அடைக்கலம் தோட்டம்,**
**கந்தசாமி கோவிலடி,**
**வட்டுக்கோட்டை.**

**புதிர் 28 இற்கான விடை: 888+088+008+008+008=1000**

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
### புதிர் இல . 29

சரியான விடை : ..............................
முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
கையொப்பம் : ..............................

# ஊதிய அதிகாரிப்பு சம்பந்தமாக உரியதீர்வு இல்லையேல் போராட்டம்

## விரிவுரையாளர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

ஊதிய அதிகரிப்பு சம்பந்தமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு யோசனைகளை எதிர் வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் முன்வைக்கவில்லை எனில் பல்கலைக் கழகத்தில் தொண்டு அடிப்படையில் பணியாற்றும் சகல பதவிகளிலிருந்தும் எதிர் வரும் 7 ஆம் திகதி செவ்வாய்கிழமை விலகிக் கொள்ளப் போவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுகளை அரசாங்கம் வழங்கும் என நம்பிக்கை உள்ளதால் நேற்று நடத்தவிருந்த எதிர்ப்பு நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளதாக பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமர துங்க தெரிவித்தார்.

தமது ஊதிய அதிகரிப்பு தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தமது சம்மேளனத்துடன் அடுத்து சில தினங்களில் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர் பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஊதியம் அதிகரிக்கப் படாமைக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக சம்மேளனத்தின் நிறைவேற்றுச் சபை சில தீர்மானங் களை எடுத்துள்ளதாக தெரிகிறது. (ஸ்ரீ-2)

# தமிழ் அகதிகளுக்கு பயங்கரவாத தொடர்புகள் இருந்தால் நிரூபியுங்கள்

## கனேடிய தமிழ்க் காங்கிரஸ் தெரிவிப்பு

எம்.வி.சன் சீ கப்பலில் வந்த தமிழ் அகதிகள் சிலருக்கு பயங்கரவாதத் தொடர்புகள் இருக்கலாம் எனக் குற்றம் சுமத்துவதை கனேடிய அரசாங்கம் நிறுத்திவிட்டு இது தொடர்பான ஆதாரங்களை முன்வைக்க வேண்டுமென கனேடிய தமிழ்க் காங்கிரஸ் கூறியுள் ளது.

கப்பலில் வந்தவர்கள் அனைவரிடமும் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புள்ளவர்களா என்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென கனேடிய குடிவரவு அமைச்சர் ஜேஸன் கென்னி கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே டேவிட் பூபாலப்பிள்ளை மேற்படி கருத்தை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனேடிய காங்கிரஸின் பேச்சாளர் டேவிட் பூபாலப்பிள்ளை இது தொடர்பாக கனேடிய ஊடகமொன்றுக்கு கூறுகையில்,

'இதுதொடர்பாக அதிகாரிகள் தீவிரமாக விசாரணை நடத்த வேண்டும் . எவருக்கேனும் எதிராக ஆதாரங்கள் இருந்தால் எமது சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுடன் இணைந்து செயற்பட்டு அந் நபர்களை எமது சட்டத்தின் மூலம் முன் நிறுத்தட்டும்' எனத் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# ஈழத்தவர் வரலாறு

24

## 4. சிங்கை நகர் அரசு

**(கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)**

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

**ஏன் தலைநகர் மாறியது?**

கந்தரோடை (கதிரமலை) யைவிட்டுத் தனது தலைநகரைச் சிங்கைநகருக்கு மாற்றியதற்கான காரணங்கள் தெளிவானவை. கந்தரோடைப் பிரதேசம் பௌத்தமத மக்கள் முக்கிய பிரதேசமாக மாறியிருந்தது. அத்துடன் சங்கமித்தை தேரியின் வருகை



நாகதீப விகாரை

யின் பின்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த பௌத்தயாத்திரிகர்கள் ஜம்புக்கோளப்பட்டின (திருவடிநிலை) மூடாக வந்திறங்கினர். ஜம்புக்கோளப்பட்டினத்தில் விகாரையொன்றும் கட்டப்பட்டிருந்தது. இதனைவிட ஸாலிப்பத விகாரை, திஸ்ஸ விகாரை என்பனவும் நாகதீவில் அமைந்துள்ளன. கந்தரோடையோடு வல்லிபுரத்திலும் பௌத்தமத மக்கள் பரவியிருந்தனர். பௌத்தம் நாகதீபப் பிரதேசத்தில் பரவியிருந்த ஒரு காலகட்டத்தில், சிங்கள ஆட்சியாளரின் ஆதிக்கத்திலிருந்து உக்கிரசிங்கன் விடுவித்திருந்தான். தீவிர சைவனாக இவன் விளங்கியுள்ளான் என்பதை இவன் ஆற்றிய திருப்பணிகள் நிரூபிக்கின்றன. கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் இவனால் புனருத்தாரனம் செய்யப்பட்டுள்ளது. இவனது மனைவியான மாருதப்புரவீகவல்லி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்தாள்.

யாழ்ப்பாண இராச்சியத்தில் சைவம் இழிவுநிலையிலிருப்பதைக்கண்டு புத்தூக்கம் அளிக்க விரும்பிக் காசிப் பிராமணர்கள், பெரியமனத்துளார் என்ற அந்தணர் என்பவர்களை வருவித்துக் குடியிருத்தியுள்ளான். இந்தியாவிலிருந்து சிலா விக்கிரகங்கள் எடுத்து வரப்பட்டு இந்துக் கோயில்களில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு உக்கிரசிங்கன் பல்வேறு முயற்சிகள் செய்தும், பௌத்தத்தினது செல்வாக்கு கதிரைமலை, வல்லிப்புரப்பகுதிகளில் நிலைகொண்டிருந்தது. அதாவது நாகதீபத்தின் மேற்குப்பகுதி, கிழக்குப்பகுதி என்பன வேற்றுமத ஆதிக்கத்திலிருக்க தென்பகுதி (யாழ்ப்பாணம்) , மக்கள் விரும்பிக் குடியேறியிராத பிரதேசமாக விளங்கியது. இத்தகு நிலையில் தனது தலைநகரை இடம் மாற்றுவதற்கு உக்கிரசிங்கன் விரும்பினான். இதனையே முதலியார் செ.இராசநாயகம், உக்கிரசிங்கன் சிவ வழிபாடுடையவனானபடியால், புத்த பள்ளிகள் நிறைந்த கதிரமலையிலும் சிங்கை நகரே சிறந்ததென நினைத்தான் போலும் என்கிறார்? சைவம் சிறப்புறக்கூடிய புதியதொரு பிரதேசத்தை அவன் தெரிவு செய்யவிரும்பினமையின் விளைவே, சிங்கைநகர் புதிய தலைநகராக மாறியது.

**சிங்கைநகர் எது?**

உக்கிரசிங்கன் புதியதலைநகர் ஒன்றினை தன் இராட்சியத்தில் உருவாக்கி விரும்பி வன்னிப்பிரதேசத்தில் திக் விஜயம் ஒன்றினை மேற்கொண்டான். அவன் வன்னி மார்க்கமாகச் செல்லுகையில் வன்னியர்கள் எழுபேரும் எதிர்கொண்டு வந்து வன்னி நாடுகளைத் திறைகொடுத்து ஆள உத்தரவு கேட்டார்கள். உக்கிரசிங்கன் அதற்குச் சம்மதித்தான். அப் பிர்தேசத்தில் அவன் உருவாக்கிக் கொண்ட தலைநகர் சிங்கைநகராகும். வடவிலங்கை இராச்சியத்தின் தலைநகரின் பெயர் சிங்கை அல்லது சிங்கைநகர் எனச் செகராசசேகரமாலை, செகராசசேகரம், தக்ஷிணகைலாசமாலை ஆகிய நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரியச்சக்கரவர்த்தி, ஒருவனைக் குறிப்பிடுகின்ற கல்வெட்டாக இலங்கையிலே கிடைத்துள்ள ஒரேயொரு


திஸ்ஸ விகாரை

கொட்டகமக் கல்வெட்டிலும் சிங்கைநகரே ஆரியச் சக்கரவர்த்தியின் அரசிருக்கையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பெயர் வருவதற்கான காரணத்தை ஆராய்வது பொருத்தமானது. சிங்கைநகர் (சமஸ்கிருதம் - ஸிங்ஹ நகர) என்ற பெயர் கலிங்கநாட்டு நகரங்களுள் ஒன்றாகிய ஸிங்ஹ புரத்தின் தொடர்புடைய பெயர் என்று கொள்ள இடமுண்டு. கலிங்க நாட்டு வம்சங்களுள் ஒன்று கி.பி 5ஆம் நூற்றாண்டு தொடங்கி 12ஆம் நூற்றாண்டு வரையாவது ஸிங்ஹ புர என்ற தலைநகரிலிருந்து ஆட்சி நடத்தியது என அறிகின்றோம் என இந்திர பாலா குறிப்பிடுகிறார். சோழன் முதலாம் பராந்தகனின் தலைநகர்களில் ஒன்று ஸிங்ஹ புரம் ஆகும். (தொடரும்)

# தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் ஈழத்து அறிஞர்கள்

03

**செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை**

ஸ்ரீ.பிரசாந்தன்
விரிவுரையாளர்,
ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

இவர் முயற்சியாக, தொல்காப்பியம் முழுமைக்கும் மரபுரைகள் உரை விளக்கங்களோடு பின்வரும் நான்கு பதிப்புகளாக வெளிவந்தன.

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம்.
(1937). சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்.
2. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்.
(1938). சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்.
3. தொல்காப்பியம் - பொருள் (பின்னான்கு இயல்கள்) பேராசிரியம்.
(1943). சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்.
4. தொல்காப்பியம் - பொருள் (முதலைந்து இயல்கள்) நச்சினார்க்கினியம்.
(1948). சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்.

இவர் தொல்காப்பியப் பதிப்பில் ஈடுபடத் தொடங்கிய காலத்துக்கு முன்பாகவே, மேற்கண்ட மூன்று அதிகாரங்களுக்கும் இளம்பூரணர் முதலிய பிறர் உரைகளும் வெளிவந்து விட்டிருந்தபோதும் எழுத்ததிகாரத்துக்கு நச்சினார்க்கினியத்தையும், சொல்லதிகாரத்துக்குச் சேனாவரையத்தையும், பொருளதிகாரத்துக்கு நச்சினார்க்கினியம் மற்றும் பேராசிரியத்தையும் கணேசையர் தெரிவுசெய்து வெளியிட்டிருப்பதற்கான காரணம் இவ்விடம் நோக்கப்பட வேண் டியது அவசியமானதாகும்.

ஒவ்வொரு அதிகாரத்துககும் வெளி வந்திருந்த உரைகளுள் மேற்கண்டவற்றைத் தாம் மூல ஆசிரியர் கருத்துகளுக்கு அதிகம் பொருத்தமுடையனவாக கணேசையர் கருதியிருக்கலாம். குறிப்பாக, சொல்லதிகாரத்துக்குப் பலர் உரை எழுதி இருந்தபோதும், சேனாவரையர் உரையைப் பதிப்பித்ததன் காரணம், சேனாவரையர்தாம் சரியாகத் தொல்காப்பியரைப் பெரிதும் புரிந்து உரை எழுதினார் எனக் கணேசையர் கருதியமையேயாகும். "சேனாவரையர் ஏனைய அதிகாரங்களுக்கும் உரை எழுதவில்லையே" எனக் கணேசையர் வருந்திக் கூறுவது உண்டு என, இவர் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இம்மூன்று அதிகாரங்களுக்குமென இவரால் பதிப்பிக்கப்பெற்ற மரபு உரைகளைத்தாம், வெளிவந்திருந்த உரைகளுள் அதிகம் சிறப்பானவையாக இவர் கருதியிருந்துள்ளார் எனக் கொள்ளலாம்.

மேலும், நச்சினார்க்கினியம், சேனாவரையம் ஆகியன சில இடங்களில் உரையாசிரியர் எனப்படும் இளம்பூரணர் உரையைக் கண்டித்துள்ளமையால், இவை இளம் பூரணத்துக்குக் காலத்தால் பிற்பட்டன என்பது தெளிவு. காலத்தால் பிற்பட்ட உரைகள் முந்தைய உரைகளின் சாதக அம்சங்களையும் உள்ளடக்கிப் புதியவற்றையும் இணைத்திருக்கும் வாய்ப்பு உளது. எனவே, பிந்தைய உரைகளைப் பதிப்பித்தால், இவை உரை மாறுபடும் முன்னைய உரைகளையும் கூடவே நோக்கும் தன்மை இருப்பதை உணர்ந்துகொண்டு கணேசையர் நச்சினார்க்கினியம், சேனாவரையம், பேராசிரியம் ஆகியவற்றைப் பதிப்பித்ததாகக் கொள்ளலாம். இதனால், இவர் எல்லாவிடங்களிலும் பின்னைய உரையாசிரியர்களது பொருள் முடிவைத்தான் ஏற்றுள்ளார் எனக் கொள்ளமுடியாது. தமக்கு ஒவ்வாத கருத்துகள் இருக்கும் நிலையில், குறித்த சூத்திரங்களுக்கான உரை விளக்கங்களில் இவர் அவற்றைச் சுட்டிச் சென்றிருக்கிறார்.

மேலும், தொல்காப்பியப் பதிப்பாசிரியர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவரான சி.வை. தாமோதரம்பிள்ளையிடத்து மேலான கணேசையரின் ஈடுபாடும் மேற்கண்ட உரைப்பதிப்புகளை வெளியிடும் ஊக்கத்தைக் கணேசையருக்கு வழங்கியிருக்கலாம் என்பதும் கருதத்தக்கதே.

இதற்குச் சான்றாக, தமது முதல் தொல்காப்பியப் பதிப்பான எழுத்ததிகரம் நச்சினார்க்கினியம் பதிப்பை, "ராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஞாபகார்த்த வெளியீடு" எனக் குறிப்பிட்டு வெளிக்கொணர்ந்துள்ளமையைச் சுட்டிக் காட்டலாம்.

மரபுரையாசிரியர்கள் தம் உரைப்பகுதிகளில் விளக்கந் தேவைப்படுகின்றவற்றுக்கு உரைவிளக்கக் குறிப்புகளை வரைந்துள்ள கணேசையர், பாடவேறுபாட்டு ஆய்வு நோக்கோடு பல திருத்தங்களையும் சுட்டிச் சென்றுள்ளார். தொல்காப்பிய இலக்கணந் தொடர்பில் வாதத்துக்குரியனவாக விளங்கிய சில சர்ச்சைகள் குறித்து நுண்மாண் நுழைபுலத்தோடு கணேசையர் வரைந்துள்ள இலக்கணக் கட்டுரைகள் சில இப்பதிப்புக்களின் பின்னிணைப்புகளாகத் தரப் பெற்றுள்ளன. இவை அறிஞருலகில் ஆரோக்கியமான கருத்து மோதல்களை உண்டு பண்ணி, சரியான கருத்து அடையாளங் காணப்படுவதற்கு உதவின. மேலும், சொல்லியல் அடிப்படையில் தொல்காப்பியத்தின் பழமையைக் கணேசையர் எடுத்துரைக்கும் முன்னுரைப் பகுதிகளும் குறிப்பிடத்தக்கன. தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் தக்க பின்னிணைப்புகளைக் கொண்ட பதிப்பாகவும் கணேசையர் பதிப்பு உள்ளது. விடய அகராதி, உதாரண அகராதி, அரும்பத விளக்கம் என்பன இவ்வகையில் குறிப்பிடத்தக்க இணைப்புகளாம். இவ்வாறு, பல காரணங்க ளாலும் தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் 'கணேசையர் பதிப்புகள்' மிக்க சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. (முற்றும்)

# மக்களின் நலன்கருதியே முகாம் மாற்றும் நடவடிக்கை

## வவு.அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)



வவுனியா மெனிக்பாம் முகாமின் நான்காவது வலயத்தில் உள்ள மக்களை அவர்களது நன்மை கருதியே கதிர்காமர் முகாமுக்கும் முதலாவது வலயத்துக்கும் மாற்றம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ். எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

நான்காவது வலயத்தில் உள்ள சுமார் நான்காயிரம் பேரை திடீரென கதிர்காமர் முகாமுக்கு மாற்ற விளைவதாகவும் அதனால் தாம் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அந்த முகாமில் தங்கியிருப்பவர்களில் சிலர் குறை கூறியிருந்தனர்.

ஆனால் அதனை மறுத்த அரச அதிபர் இது ஒன்றும் திடீர் நடவடிக்கை அல்ல என்றும் இது குறித்து ஏற்கனவே தாம் அந்த முகாம்வாசிகளிடம் பேசியிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி மெனிக் முகாமின் மூன்றாவது நான்காவது வலயங்கள் தற்காலிகமாக 6 மாத காலத்துக்கு மாத்திரமே தாக்குப்பிடிக்கும் வகையிலேயே அமைக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது மழைக் காலம் வரவுள்ளதால் மழைக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய இடங்களுக்கு அவர்களை மாற்றும் நடவடிக்கையாகவே இந்த முகாம்களை மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சார்ள்ஸ் குறிப்பிட்டார்.

முதலாவது வலயம் மற்றும் கதிர்காமர் முகாம்கள் ஓரளவுக்கு தற்காலிக வீட்டு வசதிகளையும் மழைக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய நிலையையும் கொண்டிருப்பதாலேயே ஏனைய இடங்களில் உள்ள மக்களை இந்த மாரி காலத்துக்கு முன்னதாக அங்கு மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளபடட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# ஆரியவதி பொய் சொல்கிறார்; சவுதி அதிகாரி குற்றச்சாட்டு

தன்னை வேலைக்கு அமர்த்திய சவுதி வீட்டார் தனது உடலில் ஆணியை அறைந்து சித்திரவதை செய்ததாக ஆரியவதி என்ற சிங்களப் பெண் கூறும் குற்றச்சாட்டுகள் நம்பும்படியாக இல்லை என சவுதி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊழியர்களுக்குப் பொறுப்பான சவுதி அரச துறையின் தலைவரான சாட் அல்படா, ஆரியவதியின் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை, மிரட்டும் நோக்கில் கூறப்படுபவை என்று கூறியுள்ளார்.

ஆரியவதி கூறிய குற்றச்சாட்டு தொடர்பாக சம்பந்தப்பட்ட சவுதி குடும்பத்தினரின் அயல் வீட்டாரிடமிருந்து தமக்கு எவ்வித புகாரும் வரவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த மாதம் சவுதியில் இருந்து நாடு திரும்பிய ஆரியவதியின் உடலில் இருந்து 13 ஆணிகளையும் ஊசிகளையும் கடந்த வாரம்தான் மருத்துவர்கள் எடுத்திருந்தனர்.

தற்போது கம்புருட்டிய மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பெற்று உடல் நலம் தேறிவரும் எல்.ஜி.ஆரியவதி தான் முன்பு கூறிய குற்றச்சாட்டுக்களை மீண்டும் தெரிவித்தார்.

ஆரியவதியின் உடலில் ஆணிகள் இருந்திருந்தால் விமான நிலையத்தில் உள்ள, உடலை பரிசோதிக்கும் கருவி அதை கண்டு பிடித்திருக்கும் என்றும் சவுதி அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இது குறித்து பேசிய ஆரியவதி தன்னை இரவு இரண்டு மணிக்கு விமான நிலையத்துக்கு அழைத்து வந்ததாகவும் தான் அங்கே பாதுகாப்பு சோதனைக்களுக்காக வைக்கப்பட்டிருந்த கருவிகளை கடந்து சென்ற போது எச்சரிக்கை மணி ஒலித்ததாகவும் ஆனாலும் யாரும் தன்னை கேள்வி கேட்க வில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாணத்தில் 10 ஆயிரம் வீடுகள்; இந்தியா அமைத்துக் கொடுக்கவுள்ளது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 ஆயிரம் வீடுகளை இந்தியா கட்டிக் கொடுக்கவுள்ளதாக அதன் வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் முதல்வருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பின் அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் போரினால் தங்களது வீடுகளை இழந்தவர்களுக்கு இந்த வீடுகள் வழங்கப்படும் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இப்படியாகக் கட்டிக் கொடுக்கப்படவுள்ள வீடுகள் தரம் வாய்ந்ததாகவும் நீடித்து நிற்கக் கூடிய வகையிலும் இருக்க வேண்டும் என தாம் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் தெரிவித்துள்ளதாகவும் நிருபமா ராவ் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தியா போதிய நிதியுதவி வழங்கும் எனவும் திருகோணமலையில் இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தரப்பினருடனான இந்தச் சந்திப்பின் போது இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக விதவைகளான பெண்களின் மறுவாழ்வுக்கு இந்தியா முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக உதவிகளை வழங்க வேண்டும் என தமது தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டதாக கிழக்கு மாகாண முதல்வர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் அரசியல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும் இந்திய வெளியுறவுச் செயலர் தம்முடன் விவாதித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# 03.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- கிமு301-உலகின் மிகச்சிறிய நாடுகளில் ஒன்றும் உலகின் மிகவும் பழைமையான குடியரசுமான சான் மரீனோ புனித மரீனசினால் உருவாக்கப்பட்டது.
- 1189- முதலாம் ரிச்சாட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1260-பாலஸ்தீனத்தில் மங்கோலியர்களுடன் இடம்பெற்ற போரில் மாம்லுக்குகள் வெற்றி பெற்றனர்.இதுவே மங்கோலியப் பேரரசு அடைந்த முதலாவது தோல்வியாகும்.
- 1783- அமெரிக்கப் புரட்சிப்போர் முடிவுக்கு வந்தது.பாரிஸில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐக்கிய இராட்சியத்திற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.ஐக்கிய அமெரிக்கா பிரித்தானியாவிடம் இருந்து அதிகாரபூர்வமாக விடுதலை அடைந்தது.
- 1798-பெலிசீன் கரையில் ஸ்பானியர்களுக்கும் பிரித்தானியருக்கும் இடையில் ஒருவாரப் போர் இடம்பெற்றது.
- 1801-இலங்கையில் நெல் மற்றும் தானிய வகைகளுக்கு வரி செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1855-நெப்ராஸ்காவில் அமெரிக்கப்படையினர் சியூ பழங்குடியினரைத் தாக்கி பெண்கள்,குழந்தைகள் உட்பட 100 பேரைக் கொன்றனர்.
- 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்:கூட்டமைப்புப் படைகள் கென்டக்கி மீது தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1878-தேம்ஸ் நதியில் "பிரின்சஸ் அலைஸ்" பயணிகள் கப்பல் பைவெல் அரண்மனையுடன் மோதியதில் 640 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1914-அல்பேனிய இளவரசன் வில்லியம் பலத்த எதிர்ப்பை அடுத்து ஆறுமாத ஆட்சியின் பின்னர் நாட்டை விட்டு வெளியேறினான்.
- 1933-சோவியத் ஒன்றியத்தின் அதியுயர் புள்ளியான பொதுவுடைமை முனையை(7495மீ)யெவ்கெனி அப்லாக்கொவ் எட்டினார்.
- 1939-இரண்டாம் உலகப் போர்:போலந்து மீதான ஜெர்மனியின் முற்றுகையை அடுத்து பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா,ஐக்கிய இராட்சியம்,அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியன ஜெர்மனி மீது போர் தொடுத்தன.
- 1943-இரண்டாம் உலகப் போர்: இத்தாலியை முதல் தடவையாக நேச நாடுகள் முற்றுகையிட்டன.
- 1971-கட்டார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1976-நாசாவின் வைக்கிங்-2 விண்கலம் செவ்வாய்க் கோளில் இறங்கி செவ்வாயின் மிகக் கிட்டவான வண்ணப்படங்களை பூமிக்கு அனுப்பியது.

## பிறப்புகள்

- 1814-ஜேம்ஸ் சில்வெஸ்டர்,பிரித்தானிய கணிதவியலாளர்.
- 1829-அடோல்ஃப் ஃபிக்,ஜெர்மனிய கண்டுபிடிப்பாளர்(இ.1901)
- 1948-லெவி முவனவாசா,சாம்பியாவின் முன்னாள் ஜனாதிபதி(இ.2008)
- 1976-விவேக் ஒபராய்,இந்தித் திரைப்பட நடிகர்

## இறப்புகள்

- 1658-ஒலிவர் குரொம்வெல்,இங்கிலாந்தில் முடியாட்சியை நீக்கியவர் (பி.1599)
- 1999-அப்துல்காதர் சாவுல் அமீட்,இலங்கை அரசியல்வாதி(பி.1928)

**2004-ரஷ்யாவில் பெஸ்லான் பாடசாலைப் படுகொலைகள் முடிவுக்கு வந்தது.மாணவர்கள்,ஆசிரியர்கள் உட்பட 344 பேர் கொல்லப்பட்டனர்.**



# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் கண்டனத்திற்குரியது

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் கண்டனத்திற்குரியதென சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்னாள் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் திருப்தியளிக்கும் வகையில், அமையப்பெறவில்லை என தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த விசாரணைகள் தொடர்பில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஏமாறக்கூடாதென தொழிற்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

உத்தியோகத்தர் ஒருவர் மரத்தில் கட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் அரசாங்கத்திடம் எவ்வித நியாயத்தையும் எதிர்பார்க்க முடியாதெனவும் நாட்டின் சட்டத்திற்கு அமைய மேர்வின் சில்வா தண்டிக்கப்பட வேண்டுமே தவிர, அவரது கட்சியின் ஒழுக்காற்று குழுவினால் அல்ல என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னாள் பிரதி அமைச்சருக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது கண்டனத்திற்குரியதென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தை பல ஊடகவியலாளர்கள் பதிவு செய்திருந்தபோதிலும், சாட்சியங்கள் எதுவுமில்லை என்ற காரணத்தினால் மேர்வின் சில்வா குற்றமற்றவர் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒழுக்காற்றுக்குழு அறிவித்துள்ளமை நகைப்புக்குரியதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நீண்டகாலமாக இலங்கையில் தங்கியிருந்த சீனர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

நீண்டகாலமாக இலங்கையில் தங்கியிருந்த சீனர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிக நீண்டகாலமாக இலங்கையில் வாழ்ந்து வந்த 80 சீனர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2008ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட விசேட சட்டத்தின்அடிப்படையில் குறித்த சீனப் பிரஜைகளுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாளர் யூ.வீ.நிஸ்ஸங்க தெரிவித்துள்ளார்.

1948 ஆம்ஆண்டுஇலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரே சீனர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# அரசமைப்பு திருத்த யோசனைக்கு கபே அமைப்பு எதிர்ப்பு

அரசினால் மேற்கொள்ளப்பட இருக்கும் உத்தேச அரசமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் நாட்டில் நீதியும் நேர்மையுமான தேர்தல்களை ஒருபோதும் நடத்த முடியாத நிலை ஏற்பட்டு விடும் என்று உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அறிவித்துள்ளது.

குறிப்பாகத் தேர்தல் நாளின் போது தேர்தல் திணைக்கள ஊழியர்கள், பொலிஸ் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் ஆட்சியில் உள்ள அமைச்சரவையின் பொறுப்பில் இருப்பார்கள் என்றும் இவ்வுத்தேசத் திருத்தச் சட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டிருப்பது பாதகமான சூழ்நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும் இவ்வமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.


தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர் என்றும் இவ்வுத்தேச யோசனையில் கூறப்படுகிறது. ஆனால் ஜனாதிபதியின் இந் நியமனங்கள் சுதந்திரமான தேர்தல்களை நடத்த முடியாமல் செய்துவிடும் என்று கபே தெரிவித்துள்ளது.

அரசமைப்புச் சபைக்கு உரிய அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்படுவதும் நீதியாக நடத்தப்பட வேண்டிய தேர்தல் செயற்பாடுகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்றும் இப்படி ஏராளமான விடயங்களைச் சுட்டிக்காட்ட முடியும் என்று கபே தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)




நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு, மக்கள் வங்கி, தன்னியக்க பணப் பரிமாற்றல் இயந்திர சேவையைக் கொண்ட வாகனத்தின் மூலம் யாழ்.மாநகர சபைக்கு அருகாமையில் தனது சேவையை ஆரம்பித்துள்ளது. இவ் உடனடிப் பணப்பரிமாற்ற (On Line) சேவையில், சிசு உதான மாணவர் மலர்ச்சிக் கணக்கினை ஆரம்பித்த மாணவர் ஒருவருக்கு யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலய வியாபார மேம்பாட்டு உத்தியோகத்தர் ப.உதயணன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# நல்லூரரான் திருவடிக்கு இன்று கைலாசவாகனத் திருவிழா




படங்கள் -அரவிந்

## அருள் தரவருவாய் அழகனே

அழகு மயில் மீதில் அகில வலம் வந்து
அருள் தரவருவாய் அழகனே
அன்னம் அதில் அமர்ந்து அன்னைய ரோடு
அருள் தரவருவாய் அழகனே
அடியார் குழாம் தோளில் ஆனந்தமாய் அமர்ந்து
அருள் தரவருவாய் அழகனே
அபய கரம் நீட்டியுன் அன்பர்க் கெல்லாம்
அருள் தரவருவாய் அழகனே

தருமன் -நீபன், நல்லூர்

## தங்கத் தமிழ் தந்த நல்லைக்கந்தன்

மனித எத்தனத்தில் உண்டோடா விடிவு
நல்லைக் கந்தன் சித்தத்திலே உண்டடா விடிவு
கல்லும் கசிந்துருகும் சொல்லும் தரமதுவோ
மெல்லத் தமிழினி மேலோங்கும் - செத்து
விட்டோம் நாம் என்றே நினைக்காதே -நிறை மனிதா
சங்கப் புலவனாய் தங்கத் தமிழ் தந்த
நல்லைக் கந்தனுண்டு நீ நினைப்பாய்
வெல்லத் தமிழ் கொண்டு புகழ் பாடிடுவாய்

நா.அருள்மொழித்தேவி , சரசாலை வடக்கு

## பிறவித் துயர் தீர்ப்பாய்

மருளார் பிறவித் துயர் தீர்க்கும்
மருந்தொன்றுண்டு நல்லூரில்
இருளார் வினைகள் தனை அகற்றி
இதயத் தெளிவு தரு மருந்து
பொருளார் பரமன் நெற்றியிலே
பூத்த மருந்தது நல்லூரில்
முருகா முருகா எனும் மருந்து
முத்தி மருந்தது அறி மனமே

திருமதி பி.செல்வா, வட்டுக்கோட்டை

## பூரித்தோம் சரணமையா!

பாரப்பா! பணியுமெமைப் படரும் வினையோட்டிக்
காரப்பா! கந்தையா! கலைகொஞ்சும் நல்லூரா!
சீரப்பா ! செல்வக் குமரப்பா! நீ விட்டால்
யாரப்பா நமைக்காப்பர்? யாமுந்தன் சரணப்பா!

வாவா வரமருள வள்ளிதெய் வானையொடு
தாதா தவவலிமை தரணி செழித்துயர
பாபா பலவாக்கிப் படைத்துன் பதமலரில்
பூபூ எனச் சொரிந்து பூரித்தோம் சரணமையா!

தமிழ்மணாளன், தென்மராட்சி

நல்லூரானின் திருவடியை என்றுமே தொழுவோமே!



ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்

இல. 342, 344,346 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# போர்ச்சூழலின் உளவியல் தாக்கம்

(நேற்றையத் தொடர்ச்சி)

13.10 வீதமானோர் எவ்வித நியாய மற்ற காரணிகளுக்கு இம்முயற்சியில் ஈடுபடுவர்.

14.25 வீதமானோர் உளரீதியாக சமநிலையற்றவர்கள்.

15.40 வீதமானோர் எதிர்பாராத நிகழ்வுகளால் மனம் உடைந்துபோனவர்கள்.

16.இந்நிகழ்வுகள் அக்குறிப்பிட்ட கணத்தில் தமது உணர்வுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதநிலை ஏற்படும்பொழுது... அதாவது தமது நிலையில் இருந்து தம்மை மீட்கும்படி உதவி கோரும் நிலை.

17.இவர்கள் ஆதரவு, புரிந்துணர்வு, தமது பிரச்சினையை கையாளும் திறன்கள் போன்றவற்றை செயற்படுத்த முடியாதவர்கள்.

18.25வீதமானோர்வாழ்வதிலும், சாவதிலும் ஏற்படும் நன்மை, தீமை களை ஆராய்ந்து தற்கொலையே நல்ல முடிவு என்று தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள்.

கப்பட்டுள்ளது.) போர்ச்சூழலினால் பாதிப்படைந்தோரின் மத்தியில் தற்கொலை முயற்சியின் வீதம் பற்றி ஆராய்ச்சி செய்யப்படவேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டுள்ளது.

**தற்கொலை சம்பந்தப்பட்ட மூட நம்பிக்கைகள் எவை?**

தற்கொலை முயற்சிபற்றி எமது சமூகத்தில் பலவித ஒவ்வாத உண்மைக்கு புறம்பான மூடநம்பிக்கைகள் நிலவுகின்றன. தற்கொலை பற்றிய விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கு இவற்றை இனம்கண்டு விளக்கம் கொடுத்தல் அவசியம்.

1.தற்கொலையும், தற்கொலை முயற்சியும் ஏறத்தாழ ஒரே வகையான செயற்பாடுகளில் முடியும். ஆனால் தற்கொலை முயற்சி பொதுவாக தொடர்ந்து வாழ விரும்பும் ஆதங்கம் உள்ளவர்களின் உதவியின் வேண்டுகோளாகும். (It is a cry for hell)

2.தற்கொலை முயற்சி ஓர் குறிப்பிட்ட குழுவினருக்குரியது எனும் மூட நம்பிக்கை.

யம். அலட்சியம் செய்யாது ஆதரவளித்தல் வேண்டும்.

02.தற்கொலை முயற்சியைப் பற்றி பேசினால் அதை தட்டிக்கழியாது அது பற்றி திறந்த மனதுடன் பேச இடமளித்தல்.

03.செவிமடுத்தல் மிக அவசியம், செவிமடுத்தலின்போது அவருடைய உணர்வுகளை வெளிப்படுத்த (கோபம், சோகம், குற்றஉணர்வு போன்றவை) இடமளித்தல். (மனவடு எதிரான உணர்வுகளோடு சம்பந்தப்பட்டது,)

04.தற்கொலைபுரிவது சரியோ பிழையோ என்று வாதிடவோ, அவரின் கருத்தை எடைபோடுவதையே (Non-Judgmental) தவிர்த்துக்கொள்ளல்.

05.முதலில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருந்தாரா, எவ்வாறு சாரம் ஆரம்பித்தது என எடைபோடலாம். ஆனால் அதுபற்றியே பேசிக்கொண்டிருத்தல் தாக்கத்தை கூட்டும்.

06. எத்தருணத்திலும் இந் நபருக்கு வேண்டியபோதெல்லாம் உதவி அளிக்கும் முகமாக ஆதரவு கொடுத்தல்.

எனவும், மரணமோ, நிரந்தரமானது எனவும் புரிந்துகொள்ளுவர்.

மறு பக்கத்தில் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளுவோர் இவற்றில் இருந்து மீள்படமுடியாது எனும நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இந்நிலைக்கு முக்கியகாரணங்களாக சில எதிரான உணர்வுகள் பாதிக்கப்பட்டவர்களை மேற்கொள்வதும் சிந்தித்து சீர்தூக்கிப்பார்க்கும் ஆற்றல் அற்றுப் போவதுமே காரணமாகும். அவர்களின் சிந்தனை பின்வருமாறு அமைந்திருக்கலாம்.

எனது இந்நோவை என்னால் நிறுத்த முடியாது.

என்னால் தெளிவாக சிந்திக்க முடியவில்லை.

என்னால் சரியான முடிவுகள் எடுக்க முடியவில்லை.

- இப்பிரச்சனையில் இருந்து தப்ப வழிதெரியவில்லை.

- என்னால் தூங்கவோ, சாப்பிடவோ, வேலைசெய்யவோ முடியவில்லை.

# தற்கொலையிலிருந்து தப்பித்துக்கொள்வதெப்படி?

19.உணர்ச்சிவசப்படும் குணாதிசயமுடையவர்கள்.

**தற்கொலை முயற்சியில் ஈடுபடப் போகிறவர்கள் வெளியிடும் அறிகுறிகள்:**

01.அவர்கள் தமது சம்பாஷணையில் இதை கூறக்கூடும்.

02. சிலர் இதற்குரிய முன்னேற்பாடுகளில் ஈடுபடக்கூடும் (உ+ம்) வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்துவர், கடிதங்கள் எழுதுவார், தூக்க மாத்திரைகளை சேர்ப்பார்கள்.

03.சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பர் (எல்லோரையும் ஏதாவது காரணத்தைக் கூறி வீட்டைவிட்டு போகச்சொல்லுவார்).

04.சிலரின் குடும்ப அங்கத்தவர்களில் தற்கொலை முயற்சி காணப்பட்டிருக்கலாம்.

05.குடும்பத்தவர்களோடு, நண்பர்களோடு, ஆன்மீக காரியங்களிலிருந்து தமது உறவை முறித்துக்கொள்வார்கள்.

06. பல இழப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக சில காலத்திற்கு முன் வந்திருப்பது.

07. பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாத நிலை.

08. தப்பித்துக்கொள்ள வேறு எந்த வழியும் இல்லை என்ற முடிவுக்குத் தள்ளப்படுதல்,

09.வெட்கம், குற்றஉணர்வு (False guilt)சமூகத்திற்கு முகம்கொடுக்க முடியாதநிலை. உதாரணமாக கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டோர்.

10.அதீத தீவிர மனச்சோர்வு. (தன்னைத் தனிப்படுத்துகையில் நீண்ட காலம் ஓர் அறைக்குள்ளேயே தனிமையில் இருத்தல், பசியின்மை, தூக்கமின்மை, உடல்நிறைகுறைவு போன்றவை)

11.வித்தியாசமான வழக்கத்துக்கு மாறான நாளாந்த சிக்கலான நடைமுறை வாழ்க்கை.

12.தான் தற்கொலை செய்யப் போகிறேன் என்று பயமுறுத்துபவர்கள் (Suicidal threat)

13.எப்பொழுதும் சாவைப்பற்றியே சிந்தித்து அதைப்பற்றி பேசிக்கொண்டிருப்பவர்கள்.

(இத்தரவுகள் மேற்கத்திய பல் கலாசார நிறவேறுபாடுள்ள நாடுகளில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் கண்டு பிடிக்

3.தற்கொலை செய்யப்போகிறேன் என்று கூறுபவர்கள் ஒருபொழுதும் தற்கொலையில் ஈடுபடுவதில்லை. (இது தவறு. தற்கொலை செய்பவர்களில் 80 வீதமானோர் தற்கொலையில் ஈடுபடும் முன்னர் தமது வார்த்தைகள் மூலமாகவோ,உரையாடலின் மூலமாகவோ, செய்கைகளின் மூலமாகவோ தற்கொலையைப்பற்றி பிறரிடம் தெரிவித்திருப்பார்கள். எனவே யாராவது தற்கொலை பற்றி பேசுபவர்களாயின் இது கருத்தில் கொள்ளப்படவேண்டும்).

4.ஒருதடவை தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர் வாழ்நாள் முழுவதும் மீண்டும் மீண்டும் முயற்சிக்கக்கூடும்... இது தவறு. தமது பிரச்சனைகளை உளவள ஆலோசனைகள் மூலம் கையாளக் கற்றுக்கொண்டவர்கள் மீண்டும் முயற்சிப்பதில்லை.

5.தற்கொலைசெய்யும் விருப்பம் ஒருவரின் குடும்ப பாரம்பரியத்தில் உள்ளது. (இது தவறு, இது பாரம்பரியத்தில் இல்லை ஆனால் வெளிக்காரணிகளால தூண்டப்படக்கூடும்.)

6.கிறீஸ்தவர்கள் தற்கொலை செய்வதில்லை ஏனெனில் தற்கொலை கடவுளுக்கு எதிரான பாவம். (மேற்கத்திய தரவின் படி இது தவறு எல்லா மனிதர்களது உணர்வுகளும், பிரச்சனைகளும் ஒரேமாதிரியானவை)

7.தற்கொலையும், உளச்சோர்வும் (Depression) நெருக்கிய தொடர்பு உள்ளது. இது தவறு (உளச்சோர்வு தற்கொலை எண்ணத்தின் வெளிப்பாடல்ல, உளச்சோர்வினால் பாதிக்கப்பட்ட எல்லோரும் தற்கொலை செய்வதில்லை).

8.தற்கொலை முயற்சியில் இருந்து தப்பிப் பிழைத்தவர்கள் எல்லோரும் மீண்டும் தற்கொலை செய்யமாட்டார்கள் (மேற்கத்திய ஆராய்ச்சிகளின் படி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களில் 50 வீதமானோர் மூன்று மாதங்களுக்குள் தற்கொலை செய்துகொண்டவர்கள்.

தற்கொலை முயற்சியின்பின் தேறி வருகிறார் எனும் எமது நம்பிக்கை ஆபத்தானது.

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தபபிப்பிழைத்தவர் தனது பிரச்சினை முடிந்தது என்று அளவுக்கதிகமாக மகிழ்ச்சியோடு காணப்படுவாராயின் அவரைப்பற்றி நாம் எச்சரிக்கையாய் இருத்தல் அவசியம்.

**உதவி:**

01. இனம் கண்டுகொள்ளல் அவசி

(உங் கள் தொலைபேசி இலக்கத்தை அல்லது உதவி கொடுக்கக்கூடிய யாராவது ஒருவரின் பராமரிப்பில் அவரை விடல்).

07.தற்கொலைக்குரிய ஆயுதங்களாக இந்நபர் பாவிக்கக்கூடிய பொருட்களை உடனடியாக நாசுக்காக அவரிடமிருந்து அகற்றுதல் வேண்டும். (கத்தி, கயிறு, கூரிய ஆயுதங்கள், தூக்கு போடக் கூடிய துணிவகைகள் போன்றவை)

08.உடனடி முயற்சியிலிருந்து விடுவித்தல். (அவருடன் உரையாடுவதன் மூலம நேரத்தைத் தாழ்த்தல்)

09.குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள் போன்றவரிடம் இந்த ஆபத்துக் கட்டத்தைக் கூறி, அவரை அவதானித்தில் வைக்கக் கூறலாம்.

10.இப்படியானவர்கள் தம் தொழிலில் முற்றாக ஈடுபடுவது கஷ்டமாக இருக்கலாம். இதனால் தொழில இடத்தில் அதிகாரிகளிடம் அவரோடு சிறிது காலம் பொறுமையாக இருக்கும்படி கூறலாம்.

11.அதீத மனச்சோர்வு உடையவர்களுக்கு மருந்து வசதி செய்து கொடுக்கலாம்.

12. ஓர் மருத்தவரிடம் இந்நபரைக் கூட்டிச்செல்வது அல்லது மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

13. சித்திரவதை, கற்பழிப்பு, போன்றவற்றால் மனவடு ஏற்படுபவர்களுக்கு, கூடிய அனுபவமும் அறிவும் உள்ள உளநல நிபுணர்களின் உதவி தேவை.

14.ஒவ்வொருவருக்குள்ளும் தமது நினைவுகளில் உரையாடல்கள் நடப்பது போன்ற உணர்வு ஏற்படும். மனக்குழப்பம், அல்லது இழப்பின் மத்தியில் எதிர்காலத்தில் நம்பிக்கையற்ற நிலையில் இவ்வுரையாடல்கள் "நீ வாழ்ந்து பயன் என்ன? மரணமே இதற்கு முடிவு,"போன்ற உரையாடல்கள் (Self talk) ஏற்படுவதுண்டு. உளவளத்துணையாளர் இந்த தன் உரையாடல்களை நேரான உரையாடல்களாக உ+ம்: "வாழ்வின் முடிவு மரணமல்ல, வாழ்ந்துகாட்ட வேண்டும்,"போன்றவையாக மாற்றி அதை பழக்கத்தில் கொண்டுவரச்செய்யலாம்.

அநேகமானோர் தமது வாழ்வின் ஏதாவதொருகட்டத்தில் தமது வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் எண்ணத்தால் அல்லல்படுவர். இவர்கள் எல்லாரும் தற்கொலையில் ஈடுபடுபவர்கள் என கருத்திற்கொள்ளமுடியாது. ஏனெனில் பெரும்பான்மையோர் வாழ விருப்பம் உள்ளவர்கள் அத்துடன் காலபபோக்கில் தமது பிரச்சனை நிரந்தரமற்றது

- எனது மன மடிவிலிருந்து மீள முடியவில்லை.

- எனது துயரிலிருந்து மீளமுடியவில்லை.

- துயரமற்ற எதிர்காலத்தை என்னால் சிந்தித்துப்பார்க்கவே முடியவில்லை.

- என்னால் ஒருவருக்கும் ஒருவித நன்மையுமில்லை-(தாழ்வு மனப் பான்மை)

- என்னைக் கவனிக்க யாருமில்லை.

- நான் எனது கட்டுப்பாட்டில் இல்லை.

மேற்கூறிய காரணிகளும், எதிரான சூழ்நிலைகளும், இழப்புகளும், மனமடிவும், பாதுகாப்பற்ற உணர்வும், மனவடுவும் மன அழுத்தமும், ஏனைய கார்ணிகளும் ஏற்படுத்தும் எதிரான உணர்வுகளாகிய இழவிரக்கம் (Grief), மன அழுத்தம், (Stress) குற்றஉணர்வு, (Guilt) கோபம் (Anger) போன்றவற்றால் அல்லல்படும் மக்கள் சாதாரண

**கலாநிதி தயாளினி தியாகராஜா**
உளவளத்துணையாளர்,
தென்னிந்திய திருச்சபை,
வட்டுக்கோட்டை.

வாழ்வை நடாத்த நாம் எதிர்பார்க்க முடியாது. ஓர் காயம் ஏற்படும் போது, அதை ஆற்றுமிடத்தே, மனிதநேயத்தை நாம் எதிர்பார்க்கலாம்.

தற்பொழுது எமது சமுதாயம் கூட்டு மனவடு (Collective Trauma) வினால் அல்லல்படுகின்றது. எனவே தொடர்ந்து வரும் காலங்களிலும் இம்மனவடு -(Post traumatic stress disorder) உளஅதிர்விற்கு பின்னான மனவடுவினால் தொடர்ந்தும் மக்கள் முக்கயமாக பாதிக்கப்படும் வாய்ப்பு உண்டு. எனவே இவ் ஆற்றுப்பணியை ஓர் "முதலுதவியாக" எமது சமுதாயம் கொள்ளுமானால் ஓரளவு இத்தாக்கங்களில் இருந்து மீண்டு கொள்ளலாம்.

போரிற்கு பின்னான மனவடுவிற்குரிய பயிற்சி நெறிகள் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையிலும், இதற்குரிய தனியார் உளவளத்துணை, வவுனியா, கிளிநொச்சி, போன்ற இடங்களிலும் இதில் தேர்ச்சிபெற்ற உளவளத் துணையாளர்களால் நடாத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சமூகமேம்பாட்டுக்கழகங்கள் என்பன எமது உதவியை நாடினால் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சி நெறிகளை ஒழுங்குபடுத்த ஆயத்தமாக உள்ளோம்.

*(முற்றும்)*

# பாகிஸ்தானில் ஷியா ஊர்வலத்தில் வெடிகுண்டு தாக்குதல்கள்

## 28 பேர் பலி; 180 பேர் காயம்



(லாகூர்)

பாகிஸ்தானில் ஷியா பிரிவு முஸ்லிம்களின் ஊர்வலத்தில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல்களில் 28 பேர் பலியாகியதுடன் 180 பேர் காயமடைந்தனர்.

ஷியா பிரிவு முஸ்லிம் மதத் தலைவர் ஹஸ்ரத் அலியின் நினைவு நாளை முன்னிட்டு லாகூரில் நேற்று முன்தினம் ஊர்வலம் நடைபெற்றது.

மாலை 6.35 மணியளவில் பிரார்த்தனை மைதானத்தில் ஆயிரக்கணக்கா னோர் திரண்டிருந்த இடத்தில் 2 குண்டுகள் வெடித்தன.

ஊர்வலம் நடந்து கொண்டிருந்த போது இரவு 7.15 மணியளவில் டாட்டா தர்பார் தலத்துக்கு அருகில் சக்தி வாய் ந்த மற்றொரு வெடிகுண்டு வெடித்தது. இதில் 28 பேர் உயிரிழந்தனர்.

மூன்று இடங்களில் அடுத்தடுத்து குண்டுவெடித்ததை அடுத்து மக்கள் பாதுகாப்புக்காக அங்கும் இங்கும் ஓடினர். இதில் நெரிசலில் சிக்கி பலர் காயமடைந்தனர்.

ஊர்வலத்தில் வந்தவர்கள் ஆத்திரமடைந்து பொலிசாரைத் தாக்கினர். அருகில் இருந்த பொலிஸ் நிலையத்துக்கும் வாகனங்களுக்கும் தீ வைத்தனர்.

இரண்டு குண்டு வெடிப்புகளுக்கு தற்கொலைப் படை பயங்கரவாதிகளே காரணம் என மாகாண சட்ட அமைச்சர் ராணா சனவுல்லா தெரிவித்தார்.

இந்தக் குண்டு வெடிப்புகளுக்கு தடை செய்யப்பட்ட லஷ்கர் இ ஜாங்வி அல் அல்மி என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

கராச்சியில் ஊர்வலத்தில் துப்பாக்கியால் சுட்ட மூவர் கைதுசெய்யப்பட்டதுடன் இப்பகுதி மக்கள் நெரிசல் மிகுந்த சந்தைப் பகுதியில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் நேற்று முன்தினம் நடத்திய ஊர்வலத்தின் மீது மர்ம மனிதர்கள் மூவர் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர்.

இதில் 7பேர் காயமடைந்தனர். உடனடியாக மர்ம மனிதர்கள்இருந்த கட்டடத்தை சுற்றி வளைத்த பொலிசார் மூவரை கைது செய்தனர்.

அந்த மூவரையும் தங்களிடம் ஒப்படைக்கும் படி ஊர்வலத்தில் வந்தவர்கள் பொலிஸாருடன் சிறிது நேரம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். (ஸ்ரீ-2)

# சிலி சுரங்கத் தொழிலாளர்கள் உயிர் சேதமின்றி மீட்பு

கடந்த சுமார் ஒருமாத காலமாக சிலி நாட்டில் நிலத்துக்கடியில் சுமார் 700 மீற்றர் ஆழத்தில் சிக்குண்டுள்ள 33 சுரங்கத் தொழிலாளிகளும் நலமாய் உள்ளனர் என்று கடைசியாக வெளியிடப்பட்ட வீடியோ படக்காட்சிகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்களை பாதிப்புக்கள் எதுவுமின்றி பத்திரமாக மீட்டெடுக்க முழு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் குழாய் வழியாக நிலத்துக்கு அடியில் செலுத்தப்பட்ட வீடியோ கருவிகள் மூலம் எடுக்கப்பட்ட படக்காட்சிகள் இப்போது வெளியாகியுள்ளன.

அதில் அவர்கள் மிகவும் ஆரோக்கியமாகவும் , மகிழ்ச்சியாகவும் இருக்கும் காட்சிகள் காணப்படுகின்றன.


இது இவர்களது குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் அளித்துள்ளது. இவர்களை மீட்டெடுக்க குறைந்த பட்சம் நான்கு மாதங்கள் செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)



ஈராக்கில் இருந்த அமெரிக்க படைகள் தங்கள் நாட்டிற்கு திரும்புவதையடுத்து ஈராக் பொலிஸாரே தங்கள் நாட்டின் பாதுகாப்பு பணியை மேற்கொண்டனர்.

# தலிபான் தலைவர்கள் பற்றி தகவல் கொடுப்போருக்கு ரூ.20 கோடி பரிசு

## அமெரிக்கா அறிவிப்பு



தலிபன் தலைவர்கள் இருக்கும் இடம் பற்றித் தகவல் கொடுப்போருக்கு தகவல் ஒவ்வொன்றுக்கும் ரூ.20 கோடி வரை சன்மானம் அளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் தெஹ்ரிக் இ-தலிபன் இயக்கத்தைச் சேர்ந்த ஹக்கிமுல்லா மெசூத் மற்றும் வாலி உர் ரெஹ்மான் ஆகியோரைப் பிடிப்பதற்காக இந்தப் பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரையும் வெளிநாட்டு பயங்கரவாதிகள் பட்டியலில் அமெரிக்க வெளியுறவுத்துறை சேர்த்ததை அடுத்து இந்த அறிவிப்பு வந்திருக்கிறது.

அவர்கள் இருவருக்கும் எதிரான கைது உத்தரவையும் அமெரிக்க நீதித்துறை பிறப்பித்திருக்கிறது.

இவர்கள் இருவரது உத்தரவுப்படியே ஆப்கானிலுள்ள அமெரிக்க இராணுவத் தளத்திலும் பாகிஸ்தானின் பெஷாவர் நகரிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்திலும் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அமெரிக்க உளவுத்துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். நியூயோர்க் டைம்ஸ் சதுக்கத்தைக் குண்டு வைத்துத் தகர்க்க முயற்சித்ததும் இவர்களது சதியே என அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார். (ஸ்ரீ-2)






ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடந்து வரும் உலகின் மாபெரும் இலத்திரனியல் பொருட்களின் கண்காட்சியில் அறிமுகமாகியுள்ள பனசோனிக் நிறுவனத்தின் முப்பரிமாண தொலைக்காட்சியை அதற்கான முப்பரிமாண கண்ணாடி அணிந்து பார்க்கின்றனர்.

## கூட்டணியாட்சி அமைக்க

# அவுஸ்திரேலிய பிரதமருக்கு பசுமைக்கட்சி எம்.பி.ஆதரவு

(மெல்போர்ன்)

கூட்டணி ஆட்சி அமைக்க போதிய பெரும்பான்மை இல்லாதநிலையில் அவுஸ்திரேலியபிரதமர் ஜூலியா கில்லார்டின் லேபர் கட்சிக்கு பசுமைக்கட்சி எம்.பி. ஆதரவு தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் கடந்த ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. 70 ஆண்டுகளில் இப்போது தான் முதல் முறையாக எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் தொங்கு நாடாளுமன்றம் அமைந்துள்ளது.

டோனி அபாட் தலைமையிலான லிபரல் கட்சி தேசிய கூட்டணிக்கு 73 இடங்களும் பிரதமர் ஜூலியா கில்லார்டின் லேபர் கட்சிக்கு 72 இடங்களும் கிடைத்தன. எந்த கட்சிக்குமே பெரும்பான்மைக்கான 76 இடங்கள் கிடைக்கவில்லை.


இந்நிலையில் பரு வநிலை மாறுபாடு குழு அமைப்பதாக கில்லார்டு ஒப்புக் கொண்டதற்கு ஈடாக லேபர் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் தமது கட்சியின் ஒரே உறுப்பினரான ஆடம் பந்த் ஆதரவு தருவார் என பசுமைக் கட்சி தலைவரும்



செனட் அவை உறுப்பினருமான பாப் பிரௌன் தெரிவித்தார். இருப்பினும் பெரும்பான்மை பலம் பெற இன்னும் 3 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகிறது.

கட்சி சார்பற்றவர்களாக இருக்கும் 3 எம்.பிக்கள் மற்றும் புதிதாக தேர்வாகியுள்ள சுயோட்சை எம்.பி. ஆண்ட்ரூ விக்கி ஆகியோர் தமது ஆதரவு நடத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கணனிக்கு புதியவரா? பிறிண்டர் பயன்பாடு



பிறிண்டர்கள் இப்பொழுது ஓரளவு நியாயமான விலையில் கிடைப்பதால் எல்லோரும் அவற்றை வாங்கிவிடுகிறார்கள். ஆனால் பிறிண்டரின் விலையை விட அதனுள் பொருத்த வேண்டிய இங்க் கார்ட்ரிட்ஜ் அல்லது டோனர் கார்ட்ரிஜ் விலை தான் மயக்கத்தை உண்டாக்குவதாக பலர் எண்ணுகின்றனர். கார்ட்ரிட்ஜை சிக்கனமாகப் பயன்படுத்தினால் இந்தப் பயத்திலிருந்து நீங்கள் மீளலாம். அந்த வகையில் பிறிண்டர் தொடர்பான சில ஆலோசனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

எப்போதும் பிறிண்டருக்கான புதிய டிரைவரை நிறுவவேண்டும். பிறிண்டரை வாங்கும்போது அதனுடன் தந்துள்ள டிரைவரை பின்பு மேம்படுத்தியிருப்பார்கள். அந்த டிரைவரில் உள்ள பிழைகளை நீக்கியிருப் பார்கள். புதிய வசதிகளை அதில் சேர்த்திருப்பார்கள். எனவே உங்களின் பிரிண்டரைத் தயாரித்த நிறுவனத்தின் வெப் தளத்தில் நுழைந்து அதன் புதிய பதிப்பு டிரைவர் வெளியாகியிருந்தால் அதை டவுன்லோடு செய்து கணனியில் நிறுவுங்கள்.

பிறிண்டரை ஓப் செய்ய பிறிண்டரில் உள்ள சுவிட்சையே பயன்படுத்துங்கள். பவர் ப்ளக் அருகே உள்ள சுவிட்சை பயன்படுத்தா தீர்கள். பிறிண்டரில் உள்ள ஓப் சுவிட்சை அழுத்தினால் உடனே பிரிண்ட் ஹெட்டை சுத்தம் செய்து அதை சரியான இடத்தில் நிலை நிறுத்துகிற வேலையை பல இங்க்ஜெட் பிறிண்டர்கள் செய்கின்றன.

இப்போதைய பிரிண்டர்கள் எல்லாம் யுஎஸ்பி USP போர்ட்டுகளில் இணைக்கப்படும் விதத்திலேயே வெளியாகின்றன. நீங்கள் பயன்படுத்தும் பழைய பிறிண்டரை பரலல் போர்ட்டில் இணைத்திருந்தால் அந்த பிறிண்டர் கேபிள் IEEE 1284 வரையறைக்கு ஏற்றதா என்பதைப் பாருங்கள். (பல மலிவான பிறிண்டர் கேபிள்கள் உள்ளன. அவை IEEE 1284 வரையறைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டவை அல்ல) இந்த வரையறையிலான கேபிள்களால் அச்சின் வேகம் கூடும். Bidirection வசதி இந்த கேபிளில் உண்டு

பிறிண்டரை பரலல் போர்ட்டில் இணைத்திருந்தால் பஜோசின் (Bios) செட்டப்பில் நுழைந்து ECP அல்லது EPP செட்டிங்கைக் கொண்டு வரவேண்டும். Enthaneed Parallel Port (EPP) மற்றும் Enhanced Capabilities Port(ECP) ஆகியவை பயோஸ் செட்டப்பின் எந்த மெனு வின் கீழ் வருகிறதென்பதைப் பார்த்து அவற்றை (Enabled) என மாற்றுங்கள். பயோஸை பாதுகாத்து வெளியேறுங்கள். இவை எல்லாம் கணனிகளில் பழைய பிறிண்டரைப் பயன்படுத்துவோருக்கே. நீங்கள் புதியதாக அண்மைக் காலத்தில் இவற்றை வாங்கி இருந்தால் மேலே உள்ளதை ஒதுக்கிவிட்டுப் படியுங்கள். பயன்படுத்தாத போது பிறிண்ட ரை மூடி வையுங்கள். தூசிகள், அழுக்குகள், காகித பிசிறுகள் போன்றவற்றால் பிரிண்டர் கள் சரியாக இயங்காமல் போய் விடும். எனவே பிறிண்டரின் உள்ளே துடையுங்கள். சிறிய வாக்வம் கிளீனர் மூலம் பிறிண்டரின் உள்ளே அழுக்குகளை உறிஞ்சி எடுங்கள். தூசிகள் வராத இடத்தில் பிறிண்டரை வைப்பது நல்லது.

பிறிண்டர்ஹெட்டை அவ்வப்போது துடைக்க வேண்டும். பிறிண்டருடன் வந்துள்ள சொப்வெயர்ரில் பிறிண்டர் ஹெட்டைச் சுத்தப் படுத்தும் வசதி உள்ளதா எனப் பாருங்கள். இருந்தால் அந்த சாப்ட்வெயிரை இயக்கி பிறிண்டர் ஹெட்டை துடையுங்கள். சொப்ட் வெயரில் அந்த வசதி இல்லாவிடில் பிறிண்டர் ஹெட்டை துடைக்கிற வழி பிறிண்டருக்கான புத்தகத்தில் தரப்பட்டுள்ளதா எனப் பாருங்கள். பிறிண்டர் ஹெட்டை மிதமான வெந்நீரில் நனைய வைத்த பிசிறற்ற துணியால் துடையுங்கள். lsopropxl Alcohol திரவத்தில் முக்கிய பஞ்சால் பிறிண்டர் ஹெட்டை துடைக்கவும் செய்யலாம்.


சரியான காகித்தையே பயன்படுத்துங்கள். பிறிண்டருக்கான தகவல் புத்தகத்தில் எப்படிப்பட்ட காகிதங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். மிக அதிக எடை கொண்ட காகிதங்களைப் பயன் படுத்தினால் அவை பிறிண்டரினுள் சிக்கிக் கொள்ளலாம். சில காகிதங்கள் இங்கை உறிஞ்சி பரப்பி விடுகின்றன. எனவே அச்சைப் பார்க்க /படிக்க எரிச்சலாக இருக்கும். தரமான காகிதங்களைப் பயன்படுத்துங்கள். மடங்கிய, கிழிந்த, வளைந்த காகிதங்களை அச்சடிக்கப் பயன்படுத்தா தீர்கள். இவை பிறிண்டரினுள் சிக்கி கொள்ளலாம்.

இங்க்ஜெட் பிறிண்டர்களைப் பயன்படுத்துகிறவர்கள் வாரம் ஒரு முறையாவது அச்சடிக்க வேண்டும். அந்த வாரம் அச்சடிக்க ஒன்றும் இல்லையே என்று சும்மா இருந்துவிட்டால் இங்க் உறைந்துபோய் விடும். பின்பு இங்க் கார்ட்ரிட்யையே தூக்கி எறிய வேண்டியதுதான். எனவே Test Print வசதியைப் பயன்படுத்தி கறுப்பிலும், வண்ணத்திலும் அச்சடியுங்கள். தேவைப் படுகிறதோ இல்லையோ வாரம் ஒரு முறை எதையாவது அச்சடிக்கிற பழக்கத்தை மேற்கொண்டால் பிரச்சினைகள் எழாது.

ஓரிரு வாரங்கள் வெளியூர் செல்ல நேரிட்டால் கார்ட்ரிட்ஜை கழற்றி, காற்று புகா வண்ணம் நல்ல காகித உறையில் அதை வைத்து மூடுங்கள். கார்ட்ரிட்ஜை வாங்கும்போது அது இருந்த உறையை பத்திரப்படுத்தி வைத்திருந்தால், அந்த உறையை இப்பொழுது பயன்படுத்தலாம்.

அச்சடிப்பதற்கு முன்னர் பிறிண்ட் பிரிவியூவைப் பாருங்கள். பிரிவியூவில் நன்றாக இருந்தால் மட்டுமே அச்சடியுங்கள். இதனால் காகிதமும், இங்க்கும்/ டோனரும் வீணாகாது. ஒரு காகிதத்திலேயே பல படங்களை அல்லது டொக்கு மெண்டுகளை அச்சடிக்க முடிந்தாலும் நமக்கு பணம் இலாபமே Fine Print என்ற யுடிலிட்டியை www.download. com தளத்தில் இருந்து டவுன்லோடு செய்து பயன்படுத்துங்கள். ஒரு காகிதத்திலேயே பலவற்றை அச்சடிக்கும் ஆற்றல் இதற்குண்டு.

# மருத்துவ உலகிற்கு உதவும் இணையத்தளம்




மருத்துவம் குறித்த சரித்திர நிகழ்வுகள், இன்றைய மருத்துவ ஆய்வுகள், மருந்துகள், உடல்நலம் குறித்த செய்திகள் என தொன் கணக்கில் தகவல்க ளைக் கூறும் அற்புத இணையத்தளம் ஒன்று http://www.nlm, nih. gov/என்ற முகவரியில் உள்ளது.

இது அமெரிக்க அரசின் இணையத் தளம் என்றாலும் அனைவரும் சென்று பார்த்து தகவல் களை அறியலாம். உலகளாவிய உடல் நலம், மருத்துவச் சார்பான ஆய்வுத் துறை, கனவுகள், உடல்கூறு இயல் எனப் பல பிரிவுகளில், உடல் நலம் மற்றும் மருத்துவம் குறித்த தகவல்களைக் கொண்டு இந்தத்தளம் அசத்துகிறது.

மருந்து குறித்த ஹிஸ்டரி தளம் பல அற்புத தகவல்களைத் தருகிறது. நூல்கள், கட்டுரைகள், வீடியோ கிளிப்கள், புகைப் படங்கள் என மருத்துவ உலகின் சரித்திரப் பின்னணி காட்டப்படுகிறது. இந்தத் தளத்தின் வலதுபக்கம் ஒரு தேடல் கட்டம் தரப்பட்டுள்ளது. இதில் மருத் துவ உலகம் குறித்து, நீங்கள் எந்தத் தேட லையும் மேற்கொள்ளலாம்.

தேடலுக்குக் கிடைக்கும் தகவல்கள் மிக மிக அதிகமாக உள்ளன என்பது இந்தத் தளத்தின் சிறப்பு நாம் எல்லோரும் அவசியம் காணவேண்டியதளம்இது.




# தகவல் துளிகள்

"பைல்கள்"

**psp:** போட்டோ ஷொப் போன்ற இன்னொரு இமேஜ் எடிட் புரோகிராமான Paint Shop Pro என்னும் புரோகிராமில் உருவான பைல்களுக்கு இந்த துணைப் பெயர் கிடைக்கும். இந்தப் புரோகிராம் சற்று விலை அதிகமானது.

இந்தப் பைல்களையும் கொன்வேர்டர் கொண்டு மாற்றலாம்.

"பைல்கள்"

**jpg:** இது ஒரு பொதுவான இமேஜ் பைல் வடிவமாகும். இதன் பயன்பாடு இன்டர்நெட்டில் அதிகம். ஏனென்றால் இந்த துணைப்பெயர் கொண்ட இமேஜ் பைலின் அளவு மிகக் குறைவானதாக இருக்கும். இந்தப் பைலை உருவாக்க அதிநவீன பைல் கொம்ப்ரஷன் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. பலவித இமேஜ் புரோகிராம் மூலம்இதனைத் திறந்து பார்க்கலாம். விண்டோஸ் பெயிண்ட் மற்றும் பிக்சர் மனேஜர் தொகுப்பு இந்த வகை பைல்களைப் பார்க்க மிக எளிமையான புரோகிராமாகும்.

"பைல்கள்"

**gif:** இதுவும் மிகவும் பிரபல ஒரு இமேஜ் வகை பைல் ஆகும். இதனையும் விண்டோஸ் எக்ஸ்புளோரர் கொண்டு திறந்து பார்ப்பது எளிது.

"கவனத்திற்கு"


ஆஸ்பெக்ட் ரேஷியோ

(Aspect Ratio)

ஒரு டி.வியின் அல்லது மொனிட் டரின் திரையின் அகல உயர விகிதத்தை ஆஸ்பெக்ட் ரேஷியோ என்கிறோம். வழக்கமான டிவிக்களின் திரை 4:3 என்ற விகிதத்தில் அமைந்திருக்கும்.

அதாவது 4 பங்கு அகலம் 3பங்கு உயரம். தற்போது வருகின்ற புதிய ஸ்கிரீன்கள். 16:9 என்ற விகிதத்தில் அமைக்கப்படுகின்றன. (தொடரும்)

# விண்டோஸ் – 7 தொகுப்பில் அற்புதமான பயன்பாடுகள்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இந்த DPI Scalling Window வில் நமக்கேற்ற வகையில், எழுத்தின் அளவை செட் செய்திட, ஒரு ஸ்கேல் கொடுக்கப் பட்டிருக்கும். இதனை எப்படிக் கையாள்வது என்பது, இதனைப் பார்த்தாலே புரியும். இதனை நீங்களாக செட் செய்து, பின் டெக்ஸ்ட் அளவைப் பார்த்து, அதன் பின் உங்கள் மனதிற்கு நிறைவைத் தரும் வரையில், அளவை மாற்றிப் பின் சரியான அளவு வந்த பின், அதனையே கொள்ளலாம்.

**அட்ரஸ் பார் வழி இணையதளம்**

நாம் எல்லோரும், இணையத்தளம் ஒன்றைப் பார்க்க, முதலில் பிரவுசரைத் திறக்கிறோம். பிரவுசரில் ஹோம் பேஜாக ஏதேனும் தளம் ஒன்றை அமைத்திருந்தால், முதலில் அது திறக்கப்படுகிறது. பின்னர், நாம் காண விரும்பும் தளத்தின் முகவரியினை, அட்ரஸ் பாரில் டைப் செய்து பெறுகிறோம். இது சற்று தேவையற்ற நேரத்தை எடுத்துக் கொள்கிறது. விண்டோஸ் 7 தொகுப்பில் இதற்கு ஒரு சுருக்கு வழி உள்ளது.

முதலில் உங்கள் டாஸ்க் பாரில் ரைட் கிளிக் செய்திடவும். பின்னர் கிடைக்கும் மெனுவில், Toolbars தேர்ந்தெடுத்து, அதில் Address என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது உங்கள் டாஸ்க் பாரில், Address என்ற வரி கிடைக்கும். இதில் நேரடியாக நீங்கள் காண விரும்பும், இணையதள முகவரியினை டைப் செய்திடலாம். இதில் http:// அல்லது.www என்பதெல்லாம் தேவையில்லை. எடுத்துக்காட்டாக Valam puri என்று நேரடியாக டைப் செய்திடலாம். டைப் செய்தவுடன், என்டர் தட்டவும். நீங்கள் செட் செய்துள்ள பிரவுசர் இயக்கப்பட்டு இந்த இணையதளம் காட்டப்படும். டாஸ்க் பாரில் உள்ள அட்ரஸ் பாரில் உள்ள இணைய முகவரியினை நீக்க, ஷோர் கட் மெனுவில் அட்ரஸ் பாரில் உள்ள டிக் அடையாளத்தை எடுத்து விடவும். இவை போல பல செயற்பாடுகளில், விண்டோஸ் 7 தொகுப்பு நம் வேலைத் திறனைக் குறைப்பதுடன், விரைவாகவும் செயற்பட பல வழிகளைத் தருகிறது. பின்னர் அவற்றைக் காணலாம். (முற்றும்)



இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடத்திய ஆன்மீக சிந்தனையுடன் கூடிய கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் நந்திக்கொடி ஏற்றுவதையும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையுரை நிகழ்த்துவதையும் இடம்பெற்ற கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# 4500 பேரை புதிதாக தாதியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை

## சுகாதார பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி பல்லைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களை தாதியர் சேவையில் இணைத்துக்கொள்ளும் திட்டமொன்றை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது. இதன்பிரகாரம் 4ஆயிரத்து 550 பேரை புதிதாக தாதியர் சேவையில் இணைத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக சுகாதாரப் பிரதி அமைச்சர் மகிந்தானந்தா அழுத்தகமே தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக ஏற்கனவே தாதியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2ஆம் கட்டமாக நவம்பர் மாதத்தில் சேர்த்துக்கொள்ள எண்ணியுள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அடுத்த வருடத்திலும் தாதியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள திட்டமிட்டுள்ளதுடன் வலுவான தாதியர் சேவையை ஸ்தாபிப்பதே அரசாங்கத்தின் நோக்கமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்பொருட்டு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூடுதல் ஆர்வம் காட்டி வருவதாக குறிப்பிட்ட பிரதி அமைச்சர், சர்வதேச ரீதியில் தாதியர் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான மேலதிக பயிற்சியை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மேலும் கூறினார்.

(ஶ்ரீ-4)

# ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான ஐ.தே.க. எம்.பி.பிணையில் விடுதலை

ஆயுதங்களைக் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கைதுசெய்யப்பட்டு கடந்த எட்டு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரபெருமவுக்கு நேற்று சரீர பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மத்துகம பிரதான நீதவான் துமிந்த ராமநாயக்க வெளிகொடபிட்டிய முன்னிலையில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்ட போது அவர் 25ஆயிரம் ரூபா சரீர பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தமக்குப் பிணை வழங்கக் கோரி, தெவபெரும முன்னர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுஒன்றை தாக்கல் செய்திருந்தார். இதனை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.இதனை ஆராய்ந்த மேன் முறையீட்டு நீதிமன்றம் இவருக்கு பிணை வழங்கியது.

ஆயுதங்களை வைத்திருந்தார்என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கைது செய்யப்பட்ட இவர், கடந்த எட்டு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இதனிடையே,களுத்துறை சிறைச்சாலையினுள் கையடக்கத்தொலைபேசி பாவனையில் ஈடுபட்டார் என்றும் இவர் மீது மற்றுமொரு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் களுத்துறை மேலதிக நீதவான் நாமல் பெரேரா முன்னிலையில் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, அவருக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்த நீதிவான் அந்தக் குற்றச்சாட்டிலிருந்தும் அவரை விடுவித்தார். (ஶ்ரீ-2)


50ஆவது திருமண நாள் வாழ்த்து
03.09.2010



பொன் விழா
(50ஆவது) நிறைவு நாளைக் கொண்டாடும்
திரு.திருமதி சிவஸ்ரீ சந்திரசேகரக்குருக்கள்
பொன்னம்மா அம்மா
தம்பதியரை
பல்லாண்டு வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்
மேலும் தாங்கள் சீரும், சிறப்புடனும் நிறைவான வாழ்வைப் பெற இறைவனை வேண்டுகின்றோம்.
"வாழ்க வளமுடன்"
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள் மற்றும்
சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.
கந்தவனம் கோவிலடி,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
(சி -992)



RADIANTT MARKETING (PVT) LTD
70/3, M.Vincent perera mawatha, colombo - 14
விற்பனை முகவர் தேவை (கிளிநொச்சி)

* Radiant pen
* Radiant pencil
* Magna bubble gum (normal,mint)
* Magna jelly
* Magna chocokids
* Magna chokit
* Magna poppers
* Magna lolly pop
* Hair Gel (49)
* Magna Jumbo peanut
* Chakra Coffee
* Twinky Baby diapper
* Twinky Baby wipes
Magna choco mellows.

ஆகிய உற்பத்தி பொருட்களை கிளிநொச்சியில் விற்பனை செய்வதற்கு விற்பனை முகவர் தேவை
எதிர்பார்க்கப்படும் தகைமை :-
* 2 மில்லியன் வங்கி உத்தரவாதம் (Bank Guarantee).
* பொருட்களை களஞ்சியப்படுத்தும் வசதி (Stores).
* Staff room.
* வாகன வசதி.
தொடர்புகளுக்கு - 0777777964(ASM)
0773856912(SR) (2401)

உழைப்பே மருந்து. எல்லாவிதமான குறைகளையும் தடைகளையும் வென்றுவிடக் கூடிய ஒரே சாதனம் உழைப்பு மட்டுமே.

– ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கொத்துறொட்டிக் கடையை விட்டால் வேறு எதுவுமில்லையோ!

உணவுச்சாலைகள், சில்லறை வர்த்தகங்கள், மதுபானச்சாலைகள், தெருவோர வியாபாரங்கள் இவை யாழ்ப்பாணத்தின் தற்போதைய பொருளாதாரப் பங்களிப்பில் முதன்மை பெற்றுள்ளன.

ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்று ஒருவர் செய்யும் தொழில் முயற்சியையே எல்லோரும் செய்கின்ற தன்மையை பார்க்கும்போது எங்கள் முயற்சியில் விரிவுத்தன்மை இல்லாதிருப்பதை காணமுடிகின்றது.

கண்டி தலதா மாளிகைக்கு அண்மையிலுள்ள வாவியைச் சுற்றிப் பார்ப்பதற்கென இயந்திரப் படகுகள், அதற்கென ஒரு தொகை கட்டணம் என்றவாறு வித்தியாசமான முயற்சி நடக்கின்றன.

ஹபரண, தம்புள்ள ஆகிய இடங்களில் உள்ள உல்லாசப் பயணிகள் விடுதிகளைச் சுற்றி யானைச்சவாரி நடைபெறுகின்றது. யானையில் சவாரி செய்வதற்கு வெளிநாட்டவர் ஒருவரிடம் இரண்டாயிரம் ரூபாயும், உள்நாட்டவர் ஒருவரிடம் எழுநூற்றைம்பது ரூபாயும் அறவிடப்படுகின்றன.

இதற்கு மேலாக சிறுகைத்தொழில் முயற்சிகளில் கிடைத்த உற்பத்திப் பொருட்கள், மரத்தால் செய்யப்பட்ட சிற்பங்கள் என்பவற்றின் விற்பனை ஒருபுறம் களைகட்ட, மறுபுறத்தில் பொலநறுவை – பராக்கிரமபாகு மன்னன் – இலங்கை வரலாறு என்பவற்றை சித்திரிக்கும் புகைப்படங்களின் விற்பனைகளும் தாராளம்.

இப்படியான முயற்சிகள் ஏதேனும் எங்கள் யாழ்ப்பாணத்தில் உண்டா என்று ஒருகணம் சிந்தித்தால் வேதனையைத் தவிர வேறு எதும் மிஞ்சாது.

ஆக, கொத்துறொட்டிக் கடைகளை எங்கும் அமைத்து யாழ். நகரம் முழுவதும் கடகட... கடகடகட...கடகடகடகட... இந்தச் சத்தமே கேட்ட வண்ணம் உள்ளது.

றொட்டிக்கடையை விட்டு விலகி, பண்ணைக் கடலில் படகுச் சேவையை ஆரம்பித்து பயணிகளுக்கு சிறுத்தீவை காட்டும் முயற்சி ஒன்றை மேற்கொண்டால் என்ன?

மண்டைதீவில் பறவைகள் சரணாலயம் அமைத்து அதனைப் பார்ப்பதற்கு நியாயமான கட்டணம் அறவிட்டால் கூடாதா?

இப்படியெல்லாம் முயற்சிகள் தொடங்க யாழ். நகரைச் சுற்றிச் சுற்றி உள்ள தேநீர்ச்சாலைகள் இடம் நகர்ந்து பண்ணையிலும் பறவைகள் சரணாலயப் பகுதியிலும் இயங்குமல்லவா?

இன்னுமொன்று யாழ்ப்பாணத்தில் தற்போது மிகவும் அவசியமாக இருப்பது எங்கள் அருங்கலைப் பொக்கிஷங்களை பாதுகாக்கக் கூடிய அருங்காட்சியகமாகும். இதனை அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு (SOND)போன்ற சமூக நல நோக்கு கருதிய அமைப்புகள் உருவாக்கவேண்டும்.

எங்கள் பண்பாட்டு அடையாளங்களை ஆவணப்படுத்தவும் அதனை மக்கள் பார்வையிடுவதற்குமான நிலையத்தை பொருத்தமான இடத்தில் அமைத்தால், அதனை பார்வையிடுவோரிடம் கட்டணம் அறவிடவும் எங்கள் மாணவர்கள் அவற்றைப் பார்த்து எங்கள் பண்பாட்டின் பெருமையை புரிந்துகொள்ளவும் முடியும் அல்லவா? இதுபற்றிய சிந்தனை தேவை.

# நயினை - நல்லூர் திருத்தல பாத யாத்திரை நாளை ஆரம்பம்

(நல்லூர்)

நல்லூர் கந்தன் இரதோற்சவத்தையொட்டி ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் நயினை – நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை வழமை போல் இவ்வருடமும் இடம்பெறவுள்ளது.

இவ் யாத்திரை நாளை சனிக்கிழமை மாலை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பூசைவழிபாட்டினைத் தொடர்ந்து திருமுறை பஜனை இடம்பெற்று இரவு 6 மணியிலிருந்து 7 மணி வரை நயினை வடமேற்கு படகுத் துறை அருள் ஞானவைரவர் ஆலயத்தில் பஜனை நடை பெறும்..

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை நயினை அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் அபிஷேக பூசை வழிபாட்டின் பின் வேல்பூசையுடன வேல் எடுத்துக் கொண்டு திருத்தலப் பாத யாத்திரை ஆரம்பமாகவுள்ளது. இதில் குறிகட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவன்று நல்லூரான் திருவீதியை வந்தடையவுள்ளது.இதில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை குறிகட்டுவான் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம், புங்குடுதீவு சர்வோதயம் சிவயோக சுவாமிகள் தியான மண்டபம், ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், நண்பகல் புங்குடுதீவு பெருங்காடு மூத்தநயினார் புலம் சித்திவிநாயகர் ஆலயம், மாலை தென்பெருந்துறை சிவன் ஆலயம், ஆதிவைரவர் ஆலயம் ஆகியவற்றில் தரிசித்து அன்றிரவு கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தங்கி பஜனையும் அனைத்து ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை சபைகளின் ஒன்றுகூடல் வழிபாடு, அமரர் சிவ ஸ்ரீ சீனிவாச நாகேந்திரக்குருக்கள் அவர்களுக்கு அஞ்சலி பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு புறப்பட்டு கிராஞ்சி முருகன் ஆலயம், கலட்டி சித்திவிநாயகர் ஆலயம் , மடத்துவெளி முருகன் விநாயகர் ஆலயங்கள், வேலணை துறையூர் முருகன் ஐயனார் ஆலயங்கள் ஆகியவற்றை தரிசித்து பின்னர் வங்களாவடி முருகன் ஆலயத்தில் கந்தரனுபூதி முற்றோதல் பூசை இடம்பெற்று தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெற உள்ளது.

தொடர்ந்து அதிசய வைரவர் ஆலயம், மண்கும்பான் விநாயகர் ஆலயம், அல்லைப்பிட்டி மண்டைதீவு, பண்ணை வழியாக யாழ் சத்திரஞானவைரவர் ஆலயம், கோட்டை ஸ்ரீ பால ஞான வைரவர் ஆலயம், நாவாந்துறை வைரவர் ஆலயம், நாகபூசணி அம்பாள் ஆலயம் ஆகியவற்றை தரிசித்து அன்றிரவு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தங்கி பஜனை நடைபெறும்

மேலும் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை புறப்பட்டு சீனிவாகசம் வீதிவழியாக வண்ணை சிவன், காளியம்பாள், பெருமாள் கோவில் வழியாக கந்தர் மடம் சிவ உதய நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாட்டை தொடர்ந்து செல்வநாக பூசணி அம்பாள் ஆலயம் அரசடி வீதி வழியாக நல்லை திருஞானசம்பந்த ஆதினம் நல்லைக்கந்தன் திருத்தலத்தை சென்றடைந்து திருத்தேரின் பின் திருவீதி பஜனை வேல் அர்ச்சனையுடன் நிறைவு பெறவுள்ளது.

இப்பாதயாத்திரையில் வவுனியா வேப்பங்குளம் சைவச் சிறார் இல்ல நிர்வாகஸ்தர் ராணி அம்மாவும் மற்றும் அடியார்களும் கலந்துகொள்கின்றனர்.

மேலும் திருத்தலப் பஜனை, பாதயாத்திரையில் செல்லும் வீதியில் வசிப்பவர்கள் சைவக் கலாசாரத்திற்கமைய பூரண கும்பம் வைத்துப் பக்தி சிரத்தையுடன் அடியவர்களை வழியனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

அத்துடன் இத்திருத்தலப் பஜனை பாத யாத்திரையில் கலந்து கொள்ளும் ஆண், பெண் இருசாராரும் சைவப் பண்பாடு கலாசாரத்திற்கமைய உடையணிந்து வரவேண்டும் எனவும் இவ்யாத்திரையில் அனைத்து ஆலயங்களையும் சார்ந்த கூட்டுப்பிரார்த்தனை சபைகளும் அனைத்து அடியார்களும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விபூதி பூசுவதின் பயன்

கோயில்களில் தெய்வங்களை வணங்கிய பிறகு பக்தர்கள் விபூதி பூசிக்கொள்வார்கள். அதற்குக் காரணம் என்னவென்று தெரியுமா? ஞானம் என்னும் தீயில் வினைகள் யாவும் சுட்டெரிக்கப்பட்ட பின்னர் எஞ்சி நிற்பது பரிசுத்தமான சிவதத்துவமே என்பதைக் குறிப்பதே வெண்ணீறு. தன்னை தரித்தவருக்கே மேன்மை தருவதால் விபூதி எனப்பட்டது.

# வெள்ளி நற்சிந்தனை பக்தியின் மொழி தமிழ் 138

அடியார்களின் நோய் தீர்ப்பதில் திருக்கோயிலின் பங்கு அளப்பரியது. அடியார்கள் பலர் தேவாரங்களில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அப்பர் சூலை நோய் வாய்ப்பட்ட போது இறைவழிபாட்டால் நோய் நீக்கம் பெற்றார். சுந்தரர் கண் பார்வை இழந்த போது சிவனை வணங்கிப் பார்வை பெற்றார். அவர்களுடைய வாழ்க்கையில் பெற்ற அனுபவத்தைப் பாடியது மட்டுமன்றிப் பிறரும் நோயுற்றால் திருக்கோயில் வழிபாடு செய்து நோய்நீக்கம் பெற வழிகாட்டினார்கள். சுந்தரர் திருக்கேதீஸ்வரம் பற்றிப்பாடும் போது நோய் நீக்கியருளும் சிறப்பையும் குறிப்பிட்டுள்ளார். சிவன் திருநாமங்களில் **வைத்தியநாதன்** என்ற சிறப்பான நாமமும் உண்டு.

நோய் மனிதனுடைய உடலைப் பற்றி வருத்துவது. உணவுஇ காலநிலைஇ வழிப்பயணம்இ தொற்றுநிலை என்ப வற்றால் ஏற்படுவது. முற்காலங்களில் தீராத நோயால் துன்பப்படுவோர் திருக்கோயில்களிலே சென்று தங்கியிருந்து நாளும் பொழுதும் இறைவனை வழிபட்டு நோயை ஆற்றும் நிலை இருந்துள்ளது. திருக்கோயில் தீர்த்தங்களிலே நாள்தோறும் தொடர்ந்து நீராடி வழிபட்டால் நோய் விரைவாக நீங்கும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. திருக் கேதீஸ்வரத்திலுள்ள பாலாவித்தீர்த்தம் இத்தகைய சிறப்பு வாய்ந்தது. இதனையே சுந்தரர் தமது பாடலில் **அங்கத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருளி** எனக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கம் என்ற சொல் உடலின் உறுப்பைக் குறிக்கின்றது. தன்னுடைய உறுப்பான கண்ணின் பார்வையை இழந் ததும் பின்னர் மீள இறைவனை வழிபட்டுப் பார்வை கிடைக் கப் பெற்றதும் சுந்தரர் பெற்ற அநுபவங்கள் நோயையும் நோய் நீக்கத்தையும் அவர் நன்குணர்ந்தவர். **ஒழித்தருளி** என்ற தொடர் இறையன்பு நிலையை நன்கு விளக்கி நிற்கிறது. தனது அடியார்கள் துன்பப்படுவரை இறைவன் விரும்புவதில்லை. உடனடியாகவே தனது அருளினால் அடியார் துன்பத்தை எல்லாம் ஒழித்தருளுவான் மீண்டும் நோய் வராமல் என்றென்றும் உடல் நலத்தோடிருக்க அருள் செய் வான்.

இறைவனுடைய திருக்கோலங்களில் **அர்த்த நாரீஸ்வர வடிவம்** மிகவும் அற்புதமானது. சுந்தரர் இக்கோலத்தை விளக்கும் போது **பங்கம் செய்த மடவாளொடு** என்று குறிப்பிடுகிறார் தன்னுடைய உடலிலே சரி பாதிப் பகுதியை இறைவி இறைவன் உடலோடு இணைத்துக் கொண்டிருக்கும் அற்புதமான கோலம் இத்தொடர் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக்கோலம் வேறெந்த வழிபாட்டு மரபிலும் சுட்டப்படவில்லை. ஆணும் பெண்ணும் சரிபாதியாகத் தோற்றத்தில் இணைந்திருப்பது என்பது ஒரு சிறப்பான கருத்தின் வெளிப் பாடாகவும் உள்ளது. உலக வாழ்வில்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

கருத்திலும் செயற் பாட்டிலும் ஆணும் பெண்ணுமாய் ஒன்றிணையும் நிலையே சிறந்தது. குடும்ப ஒற்றுமைக்கு இப்பண்பு மிகவும் இன்றிய மையாதது. அதிலும் சிறப்பாக ஒருவனும் ஒருத்தியுமாக இணைந்த இல்லறமே மேலானது. இரண்டு மனைவியரை விரும்பிய சுந்தருக்கு இறைவனின் அர்த்தநாரீஸ்வரக் கோலம் தன்குறையைச் சுட்டுவதாகவும் தெரிகிறது.

இப்பாடலில் கோயிற்சூழலில் உள்ள தெங்கம் பொழில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதோட்டம் கடல்சார் நிலமாகையால் அந்நிலத்தில் தென்னை மரங்கள் நன்கு செழித்து வளர்ந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித்தருளி**
**வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன் னகரிற்**
**பங்கம் செய்த மடவாளொடு பாலாவியின்**
**கரைமேற்**
**தெங்கம் பொழில் சூழ்ந்திருக் கேதீச்சரத் தானே.**

## சோனியாகாந்தி நான்காவது முறையாகவும் காங்கிரஸ் கட்சியின் தலைவராக தெரிவானார்



சோனியா காந்தியை எதிர்த்து யாரும் போட்டியிடாததால் அவர் மீண்டும் 4 ஆவது முறையாக காங்கிரஸின் தலைவராகிறார்.

காங்கிரஸ் தலைவர் பதவிக்கான வேட்பு மனு தாக்கலுக்கு நேற்றே கடைசி நாளாகும். இதேவேளை சோனியாகாந்தியை எதிர்த்து இதுவரை யாருமே மனுத்தாக்கல் செய்யாததால் தொடர்ந்து 4 ஆவது முறையாக அவர் தலைவர் ஆவது உறுதியாகி விட்டது.

இதன்மூலம் இந்தப்பதவிக்கு அதிகம் முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பெருமையை சோனியா பெறுகிறார்.

கடந்த 1998 இல் நடந்த மக்களவை தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த சீதாராம் கேசரி இந்த தோல்விக்கு தார்மீக பொறுப்பேற்று பதவி விலகினார்.

அந்தப் பதவியைச் சோனியாகாந்தி ஏற்றுக்கொண்டார். அப்போதில் இருந்து தொடர்ந்து 3 முறை இந்தப் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 8 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சி அமைக்க முடியாமல் திணறி வந்த காங்கிரஸை 2004 இல் மக்களவை தேர்தலில் சோனியா பலமான கூட்டணி அமைத்து வெற்றி பெற செய்தார்.

மேலும் காங்கிரஸ் வரலாற்றில் அதுவரை இல்லாத வகையில் மத்தியில் கூட்டணி ஆட்சியும் அமைத்தார். அதற்கு முன்பு வரை காங்கிரஸ் தனித்தே ஆட்சி செய்து வந்தது.

2009 இல் மக்களவை தேர்தலிலும் இதே கூட்டணி பாணியை பின்பற்றி வெற்றி பெற்று இப்போதும் கூட்டணி ஆட்சி நடத்துகிறார். காங்கிரஸ் தலைவராக மட்டுமன்றி ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவராகவும் அவர் இருந்து வருகிறார். (ஸ்ரீ-2)

## இளைய மகளின் திருமண அழைப்பு; ரசிகர்களிடம் ரஜினிகாந் வருத்தம்



தன்னுடைய இளைய மகள் சௌந்தர்யாவின் திருமணத்துக்கு அழைக்க முடியாமல் போனதற்கு நடிகர் ரஜனிகாந்த் ரசிகர்களிடம் வருத்தம் தெரிவித்துள்ளார்.

சௌந்தர்யா - அஸ்வின் திருமணம் இன்று சென்னை - ராஜா முத்தையா மண்டபத்தில் நடைபெறுகிறது.

தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சி தலைவர்கள் உட்பட வி.ஜ.பி.க்கள் பலருக்கும் ரஜனிகாந்த் நேரடியாக திருமண அழைப்பு விடுத்திருந்தார்

தனது படங்களை கடுமையாக விமர்சிக்கும் அன்புமணி ராமதாஸ் தொல் திருமாவளவன் போன்றோருக்கும் நேரடியா கவே அழைப்பு விடுத்தார்.

அதேநேரத்தில் ரசிகர்களை அவர் நேரடியாக அழைக்கவில்லை. இது அவரது ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது.

இந்நிலையில் தனது ரசிகர்களுக்கு வருத்தம் தெரிவித்து ரஜினிகாந்த் வெளியிட்டுள்ள செய்தியில் என்னை வாழ வைக்கும் தெய்வங்களான ரசிகப் பெருமக்களுக்கு என்னுடைய அன்பான வணக்கங்கள்.

எனது மகளின் திருமணத்தை ரசிகர்கள் நேரடியாக வந்து பார்க்க வேண்டும். வாழ்த்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் தொலைபேசி மூலமாகவும் தபால் மூலமாகவும் எனக்கு தகவல் வந்து கொண்டு இருக்கிறது.

இதற்காக ரசிகர்களை அழைப்பதற்கு விருப்பமாக இருந்தாலும் சென்னை நகரின் இட நெருக்கடி காரணமாகவும், போக்குவரத்து இடையூறுகள் கருதியும் ரகிசர்களை அழைக்க முடியவில்லை என மிக வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன்.

மணமக்களுக்கு உங்களின் நல்லாசிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன், என்று ரஜினி காந்த் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## இந்தியாவிலேயே முதன் முதலாக ரயில்கள் மோதலை தடுக்க புதிய கருவி கண்டுபிடிப்பு


(அரக்கோணம்)

கடந்த சில மாதங்களாக வட இந்தியாவில் புகையிரதங்கள் மோதி விபத்துக்கள் அதிகளவில் நடந்தன. இதனால் உயிர் சேதமும் பொருள் சேதமும் அதிகளவில் ஏற்பட்டது. இதைத் தவிர்க்க கொங்கன் புகையிரத ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் உள்ள கெர்னக்ஸ் மைக்ரோ சிஸ்டம் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவிலேயே புதிய கருவியை கண்டு பிடித்துள்ளனர். தற்போது டீசல் என்ஜின்களில் கொங்கன் புகையிரதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றி பெற்றுள்ள இந்தக் கருவியை இந்தியாவிலேயே முதன் முறையாக மின் என்ஜினில் பொருத்தும் நிகழ்ச்சி தெற்கு புகையிரதம் அரக்கோணம் புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கொங்கன் புகையிரத நிர்வாக இயக்குநர் பி.பி.தாயில் கருவியை இயக்கி தொடங்கி வைத்தார்.

இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறுகையில் புகையிரதங்கள் மோதிக் கொள்வதைத் தவிர்க்க செயற்கைக் கோள் உதவியுடன் செயல்படும் இக்கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முழுவதுமே இந்தியப் பொருட்களைக் கொண்டு இந்தியர்களின் தொழில் நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காத, ஐரோப்பா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இது போன்ற கருவிகள் இருந்தாலும் தற்போது இதில் இருக்கும் செயல்பாடுகள் வசதிகள் வேறு எங்கும் இல்லை. இது உலகிலேயே முதன் முறையாக இந்திய புகையி ரத நிலையத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

மோதலை தவிர்க்கும் இக்கருவி தானியங்கி பிரேக் முறை, தானியங்கி பாதுகாப்பு என இரு பிரிவுகளாக இயங்குகிறது. செயற்கைக் கோள் உதவியுடன் எந்த என்ஜினில் இது பொருத்தப்பட்டுள்ளதோ அதன் முன்னும் பின்னும் 3 கி.மீ தூரத்திற்கு இக்கருவியின் கண்காணிப்பு இருக்கும்.வழியில் எதிரில் புகையிரதங்கள் சென்றாலோ அதே இருப்புப்பாதையில் எதிரில் புகையிரதங்கள் வந்தாலோ செல்லும் பாதையில் புகையிரத கதவுகள் திறந்து இருந்தாலோ இது புகையிரத என்ஜினின் சாரதிக்கும் சமிக்ஜைகளை அனுப்பும். மேலும் குறிப்பிட்ட தூரத்திற்கு முன்பாகவே என்ஜினின் வேகத்தை தானே குறைத்து புகையிரதத்தை நிறுத்திவிடும்.

இக்கருவிகள் 15 வகையான விபத்து உருவாக்கும் சூழ்நிலைகளை முன்னரே கண்டறியும். தற்போது சோதனை முயற்சியாக அரக்கோணம் - சென்னை மார்க்கத்தில் அரக்கோணம் பட்டாபிராம் புகையிரத நிலையங்களுக்கு இடையே செயற்கைக்கோள் கண்காணிப்பில் இக்கருவி இயங்க உள்ளது.



முதல் முறையாக ஆறு மின் என்ஜின் களில் இது பொருத்தப்படுகிறது. இது செயல்படுவதைப் பொறுத்து படிப்படியாக இந்தியன் புகையிரம் அனைத்து மின் என்ஜின்களிலும் இது பொருத்தப்படும் என்று கூறினார்.(ஸ்ரீ-2)

## டில்லியைத் தகர்க்க தீவிரவாதிகள் சதி

### அமெரிக்கா எச்சரிக்கை

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் டில்லியில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. 71 நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் வருவார்கள் என்று தெரிகிறது. பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை இந்தியா வெற்றிகரமாக நடத்துவது பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இதனைச் சீர் குலைக்க பாகிஸ்தான் தீவிரவாதிகள் சதித்தி டம் தீட்டியுள்ளனர்.

தீவிரவாதிகளின் இந்தச் சதித்திட்டம் குறித்து உலகின் பல்வேறு நாடுகள் தங்கள் உளவுத் துறை மூலம் தகவல்களைச் சேகரித்து தங்கள் நாட்டு ரசிகர்களை உஷார்ப்படுத்தும்படி உள்ளன. சில தினங்களுக்கு முன்பு அமெரிக்கா ஒரு எச்சரிக்கை வெளியிட்டது.

இந்த நிலையில் அமெரிக்கா மீண்டும் ஒரு எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதில் டில்லியில் அடுத்தமாதம் பொது நல வாய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போதுதீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும். எனவே உஷாராக இருக்கவும் என்று கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


### காரை அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டத்திற்கான பகிரங்க அறிவித்தல்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 19.09.2010 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்படவுள்ளது. இதில் காரைநகர் அபிவிருத்தியில் ஆர்வமுடையவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

உதவி அரசாங்க அதிபர்,
காரைநகர்.

(சி - 995)


## மேட்டார் சைக்கிள் திருட்டை தடுக்கும் கருவியை கண்டுபிடித்த + 2 மாணவர்

(மானாமதுரை)

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை மாணவர் மணிகண்டன் வயது (18) மேட்டார் சைக்கிள் திருட்டைத் தடுக்கும் கருவியை கண்டு பிடித்துள்ளார். இங்குள்ள ஒ.வெ.செ. மேல் நிலைப் பள்ளியில் பிளஸ் 2 படிக்கும். இவர் கண்டு பிடித்துள்ள கருவியின் பெயர் 3 ஜி வெய்கிள் கன்ட் ரோலர் இக்கருவியில் கைத் தொலைபேசி பொருத்தப்பட்டுள்ளது.

மேட்டார் சைக்கிள் திருட்டு போகும் பட்சத்தில் அந்த கையடக்கத் தொலைபேசியை தொடர்பு கொண்டவுடன் அதே இடத்திலேயே இன்ஜின் நின்று விடும். அலாரம் அடிக்கும் ஸ்டார்ட் ஆகாது. மேட்டார் சைக்கிள் இருக்கும் இடம் குறித்து நமது கையடக்கத் தொலைபேசிக்கு எஸ்.எம்.எஸ். வரும் (கையடக்கத் தொலைபேசி நிறுவனத்திண்டவர் அமைந்துள்ள இடத்தை சுட்டிக் காட்டும்) சைடு ஸ்ட்ண்ட் போட்டு நிறுத்தி விட்டு மறதியாக அதே நிலையில் மேட்டார் சைக்கிள் எடுத்தால் ஸ்டார்ட் ஆகாது. பகலில் முகப்பு விளக்கை ஒன் செய்து மேட்டார் சைக்கிள் ஓட்டி னாலும் எரியாது.

இரவில் தானாகவே விளக்குகள் ஒளிரும். தலைக்கவசம் அணிந்தால் தான் இயங்க ஆரம்பிக்கும். செல்லும் போது தலைக்கவசத்தின் கிளிப்பை கழற்றினால் கூட மேட்டார் சைக்கிள் நின்று விடும் பிரேக் ஷூ தேய்ந்திருந்தால் அது குறித்து ஒலி எழுப்பும் விபத்து ஏற்படும் போது 108 அம்புலன்ஸ், பொலிஸ், உறவினர் ஒரு வருக்கும் தானாகவே எஸ்.எம். எஸ் செல்லும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

மணிகண்டன் தெரிவிக்கையில்,

சிறுவயதில் இருந்தே கம்யூட்டர் எலக்ட்ரானிக் துறையில் ஆர்வம் அதிகம் ஆசிரியர்கள், உறவினர் ஒருவரும் இக்கருவியை தயாரிக்க ஊக்கம் அளித்தனர். இதன் மதிப்பு 3 ஆயிரம் ரூபாய் என்றார்.

இவரது தந்தை தேநீர் கடை ஒன்றில் வேலை செய்கிறார். படிப்பில் முதலிடத்தில் வரும் மணிகண்டனுக்கு பொதுநல அமைப்புகள் உதவினால் இன்னும் பல கருவிகளை கண்டு பிடிப்பார். (ஸ்ரீ-2)

# இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் சூதாட்டம்; பங்களாதேஷ் கிரிக்கெட் சபை திடுக்கிடும் தகவல்

(டாக்கா)

இந்தியா, பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் கடந்த ஜனவரியில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் பங்களாதேஷ் வீரர்களை மட்ச் பிக்சிங்கில் (ஆட்ட நிர்ணய சதியில்) ஈடுபட வைக்க சூதாட்ட முகவர்கள் அணுகினர் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை (பி.சி.பி) திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து சென்ற பாகிஸ்தான் வீரர்கள் லோட்ஸ் டெஸ்டில் ஸ்பாட் பிக்சிங்கில் ஈடுபட்டு பிடிபட்டனர். இதையடுத்து சூதாட்ட முகவர் மசார் மஜித் மற்றும் ஒரு பெண் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப் பின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே அவுஸ்திரேலியா வீரர்கள் வோட்ஷன், ஹடின், பிரெட்லீ மற்றும் மைக்கல் ஜோன்சன் ஆகியோரும் தங்களை இந்திய சூதாட்ட முகவர்கள் அணுகியதாகத் தெரிவித்தனர். இந்தப் பிரச்சினையில் புதிய திருப்பமாக பங்களாதேஷ் வீரர்களையும் இந்திய முகவர்கள் அணுகியதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

கடந்த ஜனவரியில் இந்திய அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க பங்களாதேஷ் சென்றது. இதில் இந்திய அணி 2:0 என தொடரை வென்றது. அப்போது பங்களாதேஷ் அணியின் துணைத்தலைவர் சகிப் அல் ஹசன் ஆரம்ப வீரர் தமிம் இக்பால் ஆகிய இருவரையும் மட்ச் பிக்சிங்கில் ஈடுபட சூதாட்ட முகவர்கள் அணுகியுள்ளனர். இது குறித்து பி.சி.பி.செய்தித் தொடர்பாளர் ஜலால் யூனிஸ் கூறியதாவது, இந்தியாவுக்கு எதிரான தொடரின் போது எங்களது மூத்த வீரர்கள் இருவரை சூதாட்ட முகவர்கள் தொடர்பு கொண்டுள்ளனர். ஆனால் அவர்கள் இது குறித்து எங்களிடம் உடனடியாகத் தெரிவித் தனர். நாங்கள் உடனடியாக சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) ஊழல் தடுப்புக் குழுவிடம் தெரிவித்தோம். தற்போது வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபடாமல் தடுப்பது குறித்து கல்வி அறிவு போதித்து வருகிறோம். இதன் மூலம் மட்ச் பிக்சிங் காரணமாக எதிர்காலம் எப்படி பாதிக்கப்படும், தேசத்துக்கு எப்படி அவமானம் நேரும் என்பது குறித்து அறியலாம். தவிர சாதாரண நபருக்கும் சூதாட்ட முகவருக்கும் உள்ள வித்தியாசம் குறித்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். முன் பின் அறியாதவர்களைச் சந்திக்க வேண்டாம் என்றும் அடையாளம் தெரியாமல் வரும் தொலைபேசி அழைப்புகளைப் பேச வேண்டாம் என்றும் வீரர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஜலால் யூனிஸ் தெரிவித்தார். இதனிடையே பங்களாதேஷ் அணி முன்னாள் அணித் தலைவர் முகமது அஷ்ரபுல்லும் வெளிநாட்டு தொடரின்போது தன்னையும் சூதாட்டக்காரர்கள் தொடர்பு கொண்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

### வீரர்கள் கைது இல்லை

குற்றம் சுமத்தப்பட்டுள்ள சல்மான் பட், ஆஷிப், அமிர் ஆகிய மூவரும் இங்கிலாந்தில் உள்ள உயர் தூதரக அதிகாரி மற்றும் பி.சி.பி.தலைவர் இசாஸ் பட் ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். பின் இவர்களிடம் ஸ்கொட்லாந்து பொலிஸார் இரண்டாவது கட்ட விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் வீரர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. ஏனெனில் வீரர்களைக் கைது செய்தால் அது அவமானம் எனக் கருதி பி.சி.பி.எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக தெரிகிறது.

### சிறைக்குள் தள்ள வேண்டும்

பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டம் குறித்து தென்னாபிரிக்கா அணியின் பயிற்சியாளர் ரே ஜெனிங்ஸ் கூறுகையில், பல ஆண்டுகளாக சூதாட்டப் புகார் எழுந்து வந்துள்ளது. இப்போது பாகிஸ்தான் வீரர்கள் வசமாக சிக்கியுள்ளனர். இவர்கள் கிரிக்கெட்டுக்குப் பெரிய பாதிப்பு ஏற்படுத்தியுள்ளனர். இந்த வீரர்களுக்கு வாழ்நாள் தடை போதாது. இவர்களை சிறையில் தள்ள வேண்டும் என்றார்.

# ஆயுட் காலத் தடை விதிக்க வேண்டும்

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு ஆயுட் காலத் தடை விதிக்கப்பட வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

அண்மையில் லோர்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் எந்தவொரு வீரரேனும் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தால் அவருக்கு எதிராக கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் தலைவர் சன்மான்பட், விக்கெட் காப்பாளர் சம்ரன் அக்மல், பந்து வீச்சாளர்களான முகமட் அமீர் மற்றும் முகமட் அசீப் ஆகியோரிடம் செயலாளர் விசாரணைகளை நடத்தியுள்ளார்.

அமீர் மற்றும் ஆஸிப் ஆகியோர் வேண்டுமென்றே நோ போல்களை வீசியதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

# சர்வதேச கிரிக்கெட் அரங்கம் சூதாட்டத்தினால் தடுமாற்றம்

## ஐ.சி.சி. மீது வோட்ஷன் தாக்கு



(மெல்போர்ன்)

சர்வதேச கிரிக்கெட் ஸ்பாட் பிக்சிங் காரணமாக தடுமாறிக்கொண்டுள்ளது. ஆனால் ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்புக் கண்காணிப்புக் குழு செயல்படுவதாகத் தெரிவிக்கவில்லை என அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோட்சன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ல் இங்கிலாந்தில் நடந்த இருபது-20 உலகக்கிண்ணத்தொடரில் அவுஸ்திரேலிய வீரர்பிராட் ஹடினையும் அடுத்து நடந்த ஆஷிஸ் தொடரின் போது ஷேன் வோட்சனையும் மும்பை சூதாட்டக்கும்பல் மட்ச் பிக்சிங்கில் ஈடுபட அணுகியுள்ளனர். இதை இருவரும் உறுதி செய்தனர்.

இது குறித்து வோட்சன் கூறியதாவது,

இங்கிலாந்துப்பத்திரிகையின் ரகசிய விசாரணையில் பாகிஸ்தான் வீரர்கள் ஸ்பொட் பிக்சிங்கில் ஈடுபட்டது ஆதாரத்துடன் அம்பலமானது தவிர என்னையும் மும்பை முகவர்கள் அணுகினர் என ஏற்கனவே தெரிவித்து இருந்தேன். ஆனால் இத்தனை ஆதாரங்கள் கிடைத்தபின்பும் ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்புக்கண்காணிப்புக்குழு என்ன செய்துகொண்டுள்ளது எனத் தெரியவில்லை. உண்மையில் அவர்கள் செயற்படுகிறார்களா என்றே சந்தேகமாக உள்ளது.

ஐ.சி.சி. இதில் முழுமையாக இறங்கிய உண்மையான காரணத்தைக் கண்டறிய வேண்டும். ஒருவேளை விசாரணை மிக ஆழமாச் செல்லும் என்பதால் இவர்கள் அப்படி செய்யாமலும் இருக்கலாம். அப்படி அவர்கள் செய்யாமல் இருந்தால் மக்களிடம் கிரிக்கெட்டுக்கு இருக்கும் மதிப்பு குறைந்துவிடும். தவிர தாங்கள் பார்ப்பதில் எது உண்மை எனத் தெரியாததால் வேறு விளையாட்டுக்கு மக்கள் திரும்பிவிடுவார்கள். இவ்வாறு வோட்சன் கூறினார்.

இதனிடையே சூதாட்ட முகவர்கள் மேலும் இரண்டு அவுஸ்திரேலிய வீரர்களை அணுகியதாக இங்கிலாந்தின் டெய்லி டெலிகிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து இந்த அணியின் முகாமையாளர் ஸ்டீவ் பெர்னார் கூறுகையில்,

கடந்த யூலையில் ஆஷிஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் லோர்ட்சில் நடந்தது. அப்போது பிரட் லீ, ஜோன்சன், வோட்சன் ஆகிய மூன்று வீரர்களின் தொலைபேசி எண்களை சூதாட்ட முகவர்கள் பெற்றுள்ளனர்.

ஆனால் மேலும் எந்த விபரங்களையும் அவர்கள் தெரிவிக்கவில்லை. இதை பிரட் லீ யாரிடமும் தெரிவிக்கவில்லை. ஆனால் ஜோன்சன் உடனடியாக தனது முகாமையாளரிடம் தெரிவித்துவிட்டார் என்றார்.

# சூதாட்டப் புகாரில் சிக்கிய பாகிஸ்தான் வீரர்கள் மூவர் நீக்கம்



(இங்கிலாந்து)

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இருந்து அணித்தலைவர் சல்மான் பட் உள்ளிட்ட மூத்த வீரரையும் பாகிஸ்தான் அதிரடியாக நீக்கியுள்ளது.

சூதாட்டத்திற்கு உள்ளான சல்மான் பட், முகமெட்ஆசிப், முகமெட் அமீர் ஆகிய மூன்று பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரசிகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தமூன்றுபேரும் ஆயுள் முழுவதும் விளையாடத் தடைவிதிக்க வேண்டும் என்று முன்னாள், இன்னாள் வீரர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஸ்கொட்லாந்து பொலிசார் ஐ.சி.சி. என விசாரணை தீவிரமடைந்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை ஐ.சி.சி. ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரி ரொஸா ஹசனிடம் நேற்று நடிகை வீணா பாகிஸ்தான் வீரர்களின் சூதாட்டம் குறித்து அதன் கிரிக்கெட் சபைக்கு தெரியும்.

அவர்களுக்கும் சூதாட்டத்தில் பங்குள்ளது என்ற திடுக்கிடும் குற்றச்சாட்டை கூறினார்.

முகமெட் ஆசிப்புக்கு சூதாட்டத்ததிற்கு தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்களையும் அளித்தார்.


இந்நிலையில் சூதாட்டப்புகார் குறித்து இலண்டனில் உள்ள பாகிஸ்தான் தூதர் மூவரிடம் விசாரணை நடத்தினார். இதையடுத்து மூன்றுபேரும் அதிரடியாக நீக்கப்பட்டனர்.

பாகிஸ்தான் தூதரிடம் விசாரணையின் போது மூன்று பேரும் மன ரீதியாக நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ENGLISH CLASS
INTEGRATED ENGLISH COURSE
எழுத, பேச, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
ஆசிரியர்:- S.JAISAN
ஆரம்பம்:- நாளை (04.09.2010 சனி)
பிரிவு-I 10.00-11.00 A.M
பிரிவு-II 12.00- 01.00 P.M
(C-987)
உங்கள் அறுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.




# யு.எஸ். ஓபன் டென்னிஸ் ரபெல் நடால் வெற்றி



(நியூயோர்க்)

யு.எஸ், ஓபன் டெனிஸ் தொடரின் ஒற்றையர் இரண்டாவது சுற்றுக்கு ஸ்பெயினின் ரபேல் நடால் முன்னேறினார். பெண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் கரோலின் வோஸ்னியாக்கி, மரியா ஷரபோவா, ஜான்கோவிச் வெற்றி பெற்றனர்.

யு.எஸ். ஓபன் டெனிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கின்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் உலகின் நம்பர்-1 வீரர் ஸ்பெயினின் நடால், ரஷ்யாவின் கபாஸ்விலியைச் சந்தித்தார்.

டை பிரேக்கர் வரை சென்ற அடுத்த செற்றையும் கடுமையான போராட்டத்திற்குப் பின் 7:6 என நடால் கைப்பற்றினார்.

மூன்றாவது செற்றிலும் அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால் 6:3 என எளிதாக வென்றார்.

இறுதியில் 7:6, 7:6, 6:3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்ற நடால், இரண்டாவது சுற்றில் நுழைந்தார்.

### போராடி வெற்றி

மற்றொரு ஒற்றையர் போட்டியில் செர்பியாவின் டோகோவிச் சக வீரர் விக்டர் டிராக்கியை 6:3, 3:6, 2:6, 7:5, 6:3 என்ற செற் கணக்கில் போராடி வென்றார்.

மற்றைய போட்டிகளில் ஸ்பெயினின் டேவிற் பெரர், டாமி ராபிரட்டோ, பிரான்ஸின் ஜெரீமி சார்டி, ஆஜென்டீனாவின் நல்பாந்தியன், கனடாவின் போலன்ஸ்கி, அமெரிக்காவின் மார்டி பிஷ் ஆகியோர் வென்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

### வோஸ்கியாக்கி அசத்தல்

பெண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி அமெரிக்காவின் கல்விக்சனை எதிர்கொண்டார்.

இதன் முதல் செற்றை 6:1 என வென்ற வோஸ்னியாக்கி அடுத்த செற்றையும் 6:1 என கைப்பற்றினார்.

இறுதியில் 6:1, 6:1 என்ற நேர் செற் கணக்கில் வோஸ்னியாக்கி அசத்தல் வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா அவுஸ்திரேலியாவின் ஜர்மிளா குரோத்தை 4:6, 6:1, 6:3 என்ற செற் கணக்கில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றைய போட்டிகளில் ஜான்கோவிச் (செர்பியா), கஸ்னட்சோவா, சுவனரேவா, மரியா கிரிலன்கோ (ரஷ்யா) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

நகர சபை, யாழ்ப்பாணம்.

# 92-ம் பிரிவின்படி புத்திசுயாதீனமற்ற ஒருவரே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது

## 2-வது தடவைக்குப்பின் நாங்களும் அப்படியா?-ஜனாதிபதி கேள்வி

(கொழும்பு)

உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்களினால் எவ்வித தீங்கும் ஏற்படாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 59ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் தவணைக் காலத்தை நீடிப்பதற்காகவே அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி சுமத்திவரும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் கிடையாது.

அரசியல் சாசனத்தின் 92ஆவது பிரிவில் புத்தி சுயாதீனமற்ற ஒருவரே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டை இரண்டு முறை ஆட்சி செய்த ஜனாதிபதிகள் தேர்தலில் போட்டியிட முடியாதென அறிவிப்பதன் மூலம் அவர்களும் இந்தப் பிரிவிற்குள் உள் ளடக்கப்படக் கூடாது.

புதிய உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்களின் மூலம் எந்தவொரு நபரையும் மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் ஜனாதிபதியாக தெரிவு செய்யக்கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது.



எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படையற்ற தர்க்கங்களுக்கு மக்கள் மதிப்பளிக்கூடாதென அவர் கூறினார். (ந-5)

---

# அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சர்வோதயத்தின் புது கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்நாட்டும் வைபவம் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

ஏ-9 வீதி, நெடுங்குளம் அரியாலையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சர்வோதய இயக்குநர் திரு.திருமதி ஏ.ரி.ஆரியரட்ண பிரதம விருந்தினரா கவும் யாழ். அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ந-5)

---

# தமிழ்நாட்டில் பிரபாகரன் படம் விற்பது குற்றமா?

(சென்னை)

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் பெரியார் திராவிடக்கழக கூட்டம் நடந்தது. இக் கூட்டத்தில் பல்லடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர் புத்தகங்களையும், படங்களையும் விற்றார். அதில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் படமும் இருந்தது.

இதை அடுத்து அவர் மீது பொலிஸ் சட்டவிரோத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். ஜாமினில் வெளியே வந்த அவர் தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அதில் நான் பிரபாகரனின் படத்தை விற்றதால் தீவிரவாதி அல்ல. எந்த குற்ற எண்ணத்துடனும் நான் செயற்படவில்லை. என்மீது வழக்கு போடப்பட்டது தவறு. அதை ரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு தார்மீக ஆதரவளிப்பது குற்றம் ஆகாது என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே பிரபாகரன் படத்தை விற்றதில் எந்தத் தவறும் இல்லை. எனவே அவர்மீதான வழக்கை ரத்துச் செய்யவேண்டும் என்று வழக்காளியின் சட்டத்தரணி கூறினார்.

இந்த வழக்கிற்கு தமிழ்நாடு அரசு 2 வாரத்தில் பதில் அளிக்கவேண்டும் என நீதிபதி நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளார். (ந-5)

---

# யானைகள் அட்டகாசம் சேமமடு மக்கள் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா சேமமடு பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை காரணமாக அங்கு மீள் குடியமர்ந்துள்ள கிராமங்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாலை 5 மணியானதும் காட்டு யானைகள் ஊருக்குள் வரத் தொடங்கிவிடும் இதனால் சேமமடு, மாளிகை நொச்சிக்குளம் உள்ளிட்ட கிராமப்புற மக்கள் பலரும் ஒரே இடத்தில் இரவைக்கழித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனவெடிகளைப்பயன்படுத்தியும் காட்டுமரங்களைக் கொண்டு நெருப்பு மூட்டியும் ஊருக்குள் கூட்டம் கூட்டமாக்வும் தனித்தனியாகவும் வருகின்ற காட்டு யானைகளை துரத்துவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஊருக்குள் வருகின்ற காட்டு யானைகளை விரட்டுவதற்காக இராணுவத்தினரும் பொதுமக்களுக்கு உதவி வருகின்ற போதிலும் யானைகளைக்கட்டுப்படுத்த முடியாதிருப்பதாக பிரதேசத்து மக்கள் வவுனியா அரசாங்க அதிபருக்கு முறையிட்டுள்ளனர். (ந-5)

---

# ஐ.தே.கட்சி...

பெரியளவில் நன்மை சேர்ப்பதாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் தமது தீர்மானத்தை கட்சியின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தின் போது ஏனைய உறுப்பினர்களுக்கும் அறிவிக்க விருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

---

# டெல்லி திரும்...

பக்ஷவை சந்தித்து முக்கிய ஆலோசனைகளை நடத்தினார்.

தமிழர்களின் நிலைகளை நேரில் கண்டு அறிந்தவற்றை அறிக்கை தயாரித்து அவர் நேற்று கொழும்பிலிருந்து சென்னை வந்து அங்கிருந்து டெல்லி சென்றார்.

இந்தியா திரும்பிய நிருபமா ராவ் இன்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் அறிக்கை சமர்ப்பிப்பார். (ந-5)

---

# சட்ட விரோத...

பிரிவு நேற்று முன்தினம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியஸ்தரின் கீழுள்ள 9 பொலிஸ் பிரிவுகளிலும் சட்டவிரோதமாக இடம் பெற்று வரும் மது உற்பத்தி, மது பாவனையை இவ் விஷேட பொலிஸ் பிரிவு தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

அத்துடன் மது போதையில் வீதியில் அட்டகாசம் புரிதல், வாகனம் செலுத்துதல் போன்ற குற்றச் செயல்களும் தடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

---

# இலங்கைக்கான விசேட...

இந்திய வெளியுறவுச் செயலர் பதவியில் இருந்து விரைவில் ஓய்வு பெறவிருக்கும் நிருபமா ராவை இலங்கைக்கான இந்திய விசேட தூதுவராக நியமிப்பதை இந்திய மத்திய அரசும், தமிழக முதல்வர் மு.கருணாநிதியும் விரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் நுழைவு இலங்கையில் அதிகரித்திருக்கும் நிலையில், சீனா பற்றியும் இலங்கை பற்றியும் நன்கு தெரிந்த நிருபமா ராவை இலங்கைக்கான விசேட தூதுவராக நியமிப்பதன் மூலமே இலங்கை விவகாரத்தில் இந்தியா இராஜதந்திர ரீதியில் வெற்றி கரமாகச் செயற்பட முடியும் என இந்திய மத்திய அரசு கருதுகின்றது.

இதனடிப்படையிலேயே நிருபமா ராவ் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியை சந்தித்துவிட்டு இலங்கைக்கு விசேட பயணத்தை மேற்கொண்டார் எனவும், விரைவில் அவர் இந்தியாவின் விசேட தூதுவராக இலங்கை இன விவகாரம் தொடர்பில் இலங்கை அரசுடன் பேசுவார் என்றும் இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் விசேட தூதுவராக நிருபமா ராவை நியமிப்பது இலங்கை தொடர்பில் இந்தியா முன்னெடுக்கும் புதுவியூகம் என வெளிநாட்டு இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

---

# வடக்கில் புலிகள் செய்த...

20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிழினி பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப் பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக சட்டமா அதிபரிடம் விரைவில் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்ட நீதவான் சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

வைத்திய அதிகாரி என்.சத்தியமூர்த்தி தொடர்பாக புலனாய்வுப் பிரிவினர் சட்ட மா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளனர் வன்னியில் இடம் பெற்ற இறுதிக்கட்ட போரின் போது வெளிநாட்டு ஊடகங்களுக்கு தவறான செய்திகளை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி என்.சத்தியமூர்த்தி சம்பந்தமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை குறித்து புலனாய்வுப் பிரிவினர், சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமான விசாரணைகள் முடிபடைந்துவிட்டதாகவும் விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் படி மருத்துவர் சத்தியமூர்த்திக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய சட்டநடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அழுத்தங்கள் காரணமாகவேதான் சர்வதேச ஊடகங்களுக்கு பொய்யான தகவல்களை வழங்கியதாக சத்தியமூர்த்தி விசாரணைகளின் போது புலனாய்வுப் பிரிவினரிடம் கூறியிருந்தார். (ந-5)

---

# இனப்பிரச்சினைக்கு தீர்வு...

இச் சந்திப்புத் தொடர்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் தகவல் தருகையில்,

கொழும்பு இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்ற இந்திய வெளியுறவுச் செயலாளருடனான சந்திப்பு நேற்றுக் காலை 10.45 முதல் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

இதன் போது தமிழ் கட்சிகளின் அரங்கம் தமிழ் மக்களின் இன்றைய நிலை தொடர்பில் பல்வேறு விடயங்களை எடுத்துக் கூறியது.

குறிப்பாக அர்த்தமுள்ள மீள் குடியேற்றம், உட் கட்டமைப்பு மீள் நிர்மாணம் உட்பட்ட தமிழ் கட்சிகளின் அரங்கினால் அண்மையில் மட்டக்களப்புக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அவசரமாக தேவைப்படும் 12 விடயங்களும் எடுத்துக் கூறப்பட்டன.

அத்துடன் வடக்குக் கிழக்கு இராணுவ மயமாகி வருகிறது. வன்னியில் இராணுவத்தினரின் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்கள் நடைபெறுகின்றன.

இதனைத் தடுத்து நிறுத்தி எமது மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்.

வடக்குக் கிழக்கு உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி தமிழ் மக்களின் விவசாய நிலங்கள் கையளிக்கப்பட வேண்டும்.

இதனை ஏற்றுக்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் வடக்கில் 50 ஆயிரம் வீடுகளை கட்டிக்கொடுக்கப் போகிறோம் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு பொறியியல் பீடம் அமைத்துக் கொடுக்க போகின்றோம்.

மற்றும் அபிவிருத்தி பணி கள் முன் னெடுக் கப் போகின்றோம் என்றார்.

எனினும் இந்தியாவின் இப் பணிகளின் மூலம் தமிழ் மக்களின் மீள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது எனக் குறிப்பிட்ட தமிழ்க் கட்சிகளின் அரங்கப் பிரதிநிதிகள் அரசியல் தீர்வே அவசியம் என எடுத்துக் கூறினர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டு வரப்பட்ட 13ஆவது சீர்திருத்தச்சட்டம் முழுமையாக அமுல் படுத்தப்பட வேண்டும்.

இதில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட்டு 13ஆவது திருத்தச்சட்டம் அமுல் படுத்தப்படலாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

ஆனால் காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட்டால் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல் படுத்துவது தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்காது.

அத்துடன் இலங்கை அரசு கைதிகளின் பட்டியலை வெளியிட்டு காணாமல் போனோர் தொடர்பில் தகவல்களை வெளியிட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

இதன் மூலமே கண்ணீரும் கம்பலையுமாக வடக்குக்கிழக்கில் அலையும் பல்லாயிரக்கணக்கான தாய்மார்களுக்கு ஆறுதல் கிடைக்கும் என இந்திய வெளியுறவுச் செயலாளர் நிரூபமா ராவிடம் எடுத்துக் கூறியதாக தமிழ் கட்சிகளின் அரங்கத்தின் பிரதிநிதி எம்.கே. சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (ந-5)

மயிலி சுப்பர் ஸ்டோர்ட்

**வேலை ஆட்கள் தேவை**

- பில் கிளாக் (1 ஆள்)
- விற்பனையாளர்கள் (03 பேர்)

(ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

யாழ் வீதி,
சந்தை அருகாமை,
மானிப்பாய்.

தொடர்புகளுக்கு 0215100169
0217900388
0773946487

(சி-998)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.